கிழக்கெங்கும் பயணிக்கவுள்ள மலைமுரசு

50 வது இதழில் இருந்து

ஆனி மாதம் 01ம் திகதி

June 15, 2013

# மலைமுரசு®

அறைவு 01 இயம் 47

MALAIMURASU

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்

வார இதழ்

விலை – 20.00 Registered as a Newspaper in Sri Lanka பக்கங்கள் – 10 பிரதி சனி தோறும் திருமலையில் இருந்து வெளியாகும் பத்திரிகை

# விசமிகளின் தாக்குதலால் கோபுரச் சிலைகள் உடைக்கப்பட்டன



திருகோணமலை நகரப் பகுதியில் திருஞான சம்பந்தர் வீதியில் அமைந்துள்ள கற்பகப் பிள்ளையார் கோவிலின் கோபுரத்தில் நிர்மானிக்கப்பட்டிருந்த 13 சிலைகள் அடையாளம் காணப்படாத விசமிகளால் உடைக்கப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சனச் செறிவுள்ள இவ்வாலயச் சூழலில் இவ்வாறான- தொரு விசமத்தன நடவடிக்கை எவ்வாறு எவரது அவதானத்தையும் ஈர்க்காது நிகழ்ந்துள்ளது என்பது பெரும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

திட்டமிட்ட இச்சதியின் சூத்திரதாரிகளைத் தேடிக்கண்டு பிடிக்கும் பணியினைக் காவல்துறை ஆரம்பித்துள்ளது. இச் சிலையுடைப்புச் சம்பவத்தின் பின்னணியில்.. (ஶ்ரீ) 7

## மூதூர் பிரதேச சபைச் சுகாதாரத் தொழிலாளர்கள் இரண்டரை இலட்சம் பெறுமதியான தாலிக்கொடியைக் கண்டெடுத்து ஒப்படைப்பு

கடந்த 2013.06.07 ஆந் திகதி தொலைக்கப்பட்ட இரண்டரை இலட்சம் பெறுமதியான, தாலியுடனான தங்கச் சங்கிலி கடந்த 2013.06.12 ஆந் திகதி, சுத்திகரிப்புப் பணியில் ஈடுபட்ட மூதூர் பிரதேச சபை சுகாதாரத் தொழிலாளர்களால் கண்டெடுக்கப்பட்டு, உடன் உரியவர்களிடன் ஒப்படைக்கப்பட்டது.

மூதூர், மின்சாரநிலைய வீதியில் வசித்துவரும் திருமதி. சாள்ஸ் அல்பேர்ட் ஸ்ரெலா புஸ்பராணி வழமையாக தனது தாலியுடனான.. 7



## கிராமப் புரச் சிறார்களின் கண்பார்வையை மேம்படுத்த முஸ்லிம் எய்ட் நடவடிக்கை



பாடசாலை மாணவர்களின் கண்பார்வையை மேம்படுத்தும் நோக்கத்துடன் முஸ்லிம் எய்ட் நிறுவனம் அதன் மாவட்டச் செயற்பாட்டு அமைப்புக்களான ரெக்டோ.. 7

அரங்காடல் நாளை...

அழைப்பிதழ்

விருப்புடையோர் எல்லோரும் வருக

"அரங்காடல்"

வெளி – 10

16.06.2013

இ.கி.ச

கோணேஸ்வரா இந்துக்கல்லூரி

திருகோணமலை

மாலை 04.00 மணி 7

## புதிய நிர்வாகத்தின் கீழ் வரோதய நகர் கிராம அபிவிருத்திச் சங்கம்

கடந்த 2012.11.30 அன்று கலைக்கப்பட்ட வரோதய நகர் கிராம அபிவிருத்திச் சங்கம் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்ட நிலையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கமானது குறித்த சில காரணங்கள் முன்வைக்கப்பட்டு கலைக்கப்பட்ட நிலையில்.. 7

## கேள்விக்குறியாகியுள்ள பாரதிபுரம் மக்களின் வாழ்வாதாரம்

போரினால் கடுமையாகப் பாதிப்படைந்துள்ள மூதூர் பாரதிபுரம் மக்களின் வாழ்வாதாரம் கடுமையான கேள்விக்குறிக்குள் மூழ்கிக் கிடப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. சுமார் 132 ஆண்துணையினை இழந்த.. 7

## வரியற்ற வாகன இறக்குமதிப் பத்திரம் புறக்கணிக்கப்பட்டது திருமலை

உள்ளூராட்சி அதிகார அலகுகளுக்கான வரியற்ற வாகன அனுமதிப்பத்திர வழங்கலில் திருமலை மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 2010ம் ஆண்டில் அமைச்சரவையால் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு ஏற்ப வரியற்ற வாகன் அனுமதிப் பத்திர வினியோகம் உள்ளூராட்சி அதிகார சபையின் தலைவர்களுக்கும் வினியோகிக்கப்பட்டு வருகின்றன. அதன்படி தற்போது வடக்கு மற்றும் கிழக்கின் உள்ளூர் அதிகார சபைத் தலைவர்களுக்கும் அவ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன என வெளியாகிய செய்திகளைத் தொடர்ந்து யாழ் மாநகர சபை, வவுனியா நகரசபை, மட்டக்களப்பு மாநகரசபை, ஏறாவூர்பற்று பிரதேச சபை, கோரளைபற்று பிரதேச சபை, கோரளைபற்று வடக்கு பிரதேச



சபை, மண்முனை, மண்முனை வடக்கு மற்றும் மண்முனைத் தெற்கு ஆகிய மூன்று பிரதேச சபைகள் உட்பட போரதீவுப்பற்றுப் பிரதேசசபை ஆகிய உள்ளூராட்சி அலகுகளுக்கே வரியற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளன.

இவற்றிற்கு மேலதிகமாக மத்திய மற்றும் வடமேல்மாகாண சபைகளின் சாவடைந்த.. 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042

## வணக்கம்

### கௌரவ விருதுகள்!!!

அண்மையில் மூதூர் சுகாதாரத் தொழிலாளர்களின் தன்னலமற்ற நடவடிக்கையொன்று எம்மை மெய்சிலிர்க்க வைத்துள்ளது.

சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகையொன்றைத் தவறுதலாக தனது குப்பைக் கூடைக்குள் எறிந்துள்ளார் பெண்ணொருவர். அக் குப்பைக் கூடை சுகாதாரத் தொழிலாளர்களால் சேகரிக்கப்பட்டு கழிப்பிடத்தில் கொட்டப்பட்ட பின் அத் தகவலைக் கேட்டு அந்த சுகாதாரத் தொழிலாளர்கள் குப்பைகளைச் சல்லடையிட்டுத் தேடி தங்க நகையைக் கண்டுபிடித்து உரியவரிடம் சேர்ப்பித்த செயலானது அவர்களை அளவற்ற உயரத்திற்குக் கொண்டுசென்று விட்டது.

மனித மனங்களுள் பேராசை என்னும் அரக்கன் புகுந்துவிட்ட இந் நிலையில் சில மனித மனங்களால் மட்டும் எவ்வாறு இச் செயல் சாத்தியமாகின்றது என்னும் கேள்வியும் எம்முள் எழுகின்றது.

பணம் அல்லது சொத்து என்பது வாழ்வதற்கானது மட்டுமேயொழிய வாழ்க்கையல்ல என மீண்டும் நிலை நிறுத்தியுள்ளனர் அந்த மனிதர்கள்.

அளவற்ற செல்வத்தின் மீதான ஆசை பெருகிப் போன பலர் வாழ்வை அதனால் இழந்து வருவதை நமது மண் நாளாந்தம் எமக்குச் சொல்லித் தருகின்றது.

நீங்கள் நம்பும் சிவன் உறையும் இம் மண்ணில் அவனது அற்புதமான வரிகளை - பற்றற்றான் பற்றினைப் பற்று- பலர் மறந்துவிட்டு அவனது சன்னிதானத்திற்கே பேராசையுடன் வந்து போவதைப் பார்க்கின்றோம்.

இருண்ட மனம், நேர்மையற்ற எண்ணம், கள்ளப் பார்வை, பேராசை மனம், ஆனால் வெண்ணிற வேட்டி, நெற்றியில் நீறு, வசீகரப் புன்னகை, சிலையாயுள்ள இறையின் முன் பவ்வியம், பக்தி முத்தியொழுகும் நடவடிக்கை..... இவற்றோடு அலையும் மனிதப் பிணங்களின் முன்.... மூதூர் சுகாதாரத் தொழிலாளிகளின் செயல் எவ்வகையானது என நீங்களே ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.

புலனின் பாற்படாத நடவடிக்கைகளால்தான் மனிதர்கள் மனிதர்களாகவே மதிக்கப் படுகின்றார்கள். கள்ளப் புலனுக்குட்படாது செயலாற்றும் மனிதர்களின் செயற்பாடுகளால் அவர்கள் உடலே கோவிலாகப் போவதைத் திருமூலர் அழகாகச் சொல்லியிருக்கின்றார்.

ஐம்புலனையும் அடக்குதல் மாமுனிவர்கே அரிதான செயல். நாம் பேராசைப்படும் புலனொன்றை மட்டும் அடக்கினாலே மனிதராகலாம் என்றே தோற்றுகின்றது.

முயற்சிப்போமா?

# பால்ய வயதுத் திருமணத்தை நிறுத்திய அலுவலர்

திருமணம் செய்து கொள்வதற்கு தயாராகவிருந்த மாணவியை மீண்டும் பட்டதாரி-யொருவர் பாடசாலைக்கு அனுப்பி-வைத்த சம்பவமொன்று வெருகல் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஈச்சிலம்பற்றுப் பாடசாலை-யொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவியான 15 வயது சிறுமிக்-கும் 18 வயதான இளைஞனுக்கும் திருமணம் செய்து வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த திருமண ஏற்பாடுகள் தொர்டர்பில் அப்பிரதேச சிறுவர் பாதுகாப்புக் குழுவிற்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. இதனையறிந்த பிரதேச செயலக திட்டமிடல் கிளையின் பட்டதாரி உத்தியோகத்தர் ஒருவர் உடனடியாக சிறுமியின் வீட்டுக்கும் இளைஞனின் வீட்டுக்கும் சென்று அவ்விருவரின் பெற்றோர்களையும் சந்தித்து கலந்துரையாடியதுடன் சிறுமிக்கும் குறித்த இளைஞனுக்கும் சிறுவயதில் திருமணம் செய்வதனால் ஏற்பாடும் பாதிப்புகள் மற்றும் சமூக உணர்வுகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து பெற்றோரும் சம்பந்தப்பட்ட இளைஞனும் தங்கள் மீதான சமூகப் பொறுப்புக்களை உணர்ந்துகொண்டதுடன் சிறுமியை மீண்டும் கல்வியை தொடர்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுப்பதற்கு உறுதியளித்துள்ளனர்.இந்த விடயத்தில் அதீத அக்கறை எடுத்த பட்டதாரி உத்தியோகத்தரை சிறுவர் பாதுகாப்புக்குழு உறுப்பினர்கள் பாராட்டியுள்ளனர்.

## திருமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவனின் இரட்டைச் சாதனை

திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மாணவனான செல்வன். லவகுமார் ரிஷிகேசன் ஒலிம்பியாட் போட்டியில் தேசிய ரீதியில் தெரிவாகி இவ்வருடம் பல்கேரியாவில் நடைபெறவுள்ள சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு (BIMC) செல்கிறார். அத்துடன் IT Master Mind போட்டியிலும் தேசிய ரீதியில் பங்குபற்றி மூன்றாம் இடத்தை பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## கிணற்றில் விழுந்து ஆசிரியை உயிர்மாய்த்தார்

திருகோணமலை, விகாரை வீதியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவர் அயல்வீட்டுக் கிணற்றில் விழுந்து உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது திருகோணமலை அரசினர் தமிழ் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆனந்தேஸ்வரி (வயது 49) என்ற ஆசிரியையே இவ்வாறு உயிரிழந்-துள்ளார்.

இவர் தனது வீட்டின் மதிலில் ஏறி அயல் வீட்டு கிணற்றில் விழுந்துள்ளதாக பொலிஸ்



விசாரணையின்போது தெரிய வந்துள்ளதாகவும், இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக திருகோணமலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# ஆசியமுரசு

## என்னைக் கொல்ல சதித்திட்டம்: இம்ரான் கான்

பாகிஸ்தான் பொதுத்தேர்தல் பிரச்சாரத்தின் போது நிகழ்ந்த விபத்தல்ல, திட்டமிட்ட சதிச்செயல் என முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முன்னாள் கிரிக்கெட் வீரரும், தெஹ்ரிக் ஈ இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான் கான் கூறுகையில், பாகிஸ்தான் பொதுத்தேர்தல் பிரசாரத்தின் போது நடந்தது விபத்து அல்ல, திட்டமிட்ட சதிச்செயல்.

இதுகுறித்து அரசு சார்பில் முன்கூட்டியே எனக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு விட்டது.

பிரச்சாரப் பேரணியின் போது என்னை படுகொலை செய்ய சில சக்திகள் திட்டமிட்டி-ருந்தனர், அப்போது அவர்கள் எச்சரிக்கப்-பட்டனர் என்று தெரிவித் துள்ளார்.



## எவரெஸ்ட் சிகரத்தில் பனிப்பாறைகள் 13 சதவிகிதம் உருகியுள்ளது

இமயமலையில் அமைந்துள்ள உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரத்தில் அதிகளவில் பனிப்பாறைகள் உள்ளன.

இது குறித்து இத்தாலியின் மிலன் பல்கலைக்கழகத்தை சேர்ந்தது சுதீப் தாகூரி தலைமையிலான குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர்.

அதில், பருவநிலை மாற்றம் காரணமாக எவரெஸ்ட் சிகரத்தில் உள்ள பனிப் பாறைகள் உருகி வருகின்றன என்று தெரிவித்துள்ளனர்.

கடந்த 1960ம் ஆண்டில் இருந்து இது உருக தொடங்கியுள்ளது. இதனால் அங்கு 1 சதுர கிலோ மீற்றர் அளவுக்கு பனிப்பாறைகள் உருகி மறைந்துள்ளன. அதாவது கடந்த 50 ஆண்டுகளில் 13 சதவீதம் பனி உருகியுள்ளது.

பனிப்பாறைகள் உருகி வருவதால் மறைந்து கிடந்த எவரெஸ்ட் சிகரத்தின் பாறைகளும், அவற்றின் இடிபாடுகளும் தற்போது மெல்ல மெல்ல தெரிய தொடங்கியுள்ளன.

மேலும் கடந்த 1960ம் ஆண்டுகளை விட 1990ம் ஆண்டுகளில் தான் பனிப்பாறைகள் அதிக அளவில் உருக தொடங்கின. ஏனெனில், அந்த காலகட்டத்தில் தான் எவரெஸ்ட் சிகரத்தில் வெப்பம் அதிகரித்தது என்றும் தாகூரி குழுவினர் தெரிவித்துள்ளனர்.



## பயணத்தை ஆரம்பித்தது சீன விண்கலம்



சீனா மற்றுமொரு விண்கலத்தை விண்ணுக்கு ஏவியுள்ள-தாக தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று விண்வெளி வீரர்களு-டன் இந்த விண்கலம் தமது பயணத்தை ஆரம்பித்துள்ளது. இதில் பெண் வீராங்கனை ஒருவரும் உள்ளடங்கி-யுள்ளமை விசேட அம்சமாகும். வாங் யாப்பிங் என்ற இவர், விண்வெளிக்குச் செல்லும் சீனாவைச் சேர்ந்த இரண்டாவது பெண் என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டு வாரங்களுக்கு இவர்கள் விண்வெளியில் தங்கியிருந்து ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

"சிங்கங்களின் வரலாற்றை அவை சொல்லும் வரைக்கும் அவற்றை வேட்டையாடுபவர்கள் சொல்லும் புனைவுகளைத்தான் நம்பவேண்டியிருக்கிறது"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசமுரசு

## வர்த்தக வானூர்தி செலுத்தும் அனுமதியை விமானப்படை விமானிகளுக்கு வழங்குக

இலங்கையின் விமானப் படை தனது விமானிகளுக்கு வர்த்தக வானூர்தி செலுத்தும் அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் பொழுது எழுத்தறிவுப் பரீட்சைகளிடமிருந்து விலக்களிக்குமாறு இலங்கையின் பொது வான் பறப்பு ஆணைக்குழுவிடம் கோரியுள்ளது. இவ்வாறு வழங்கப்படுமாயின் அந் நடவடிக்கையானது வானூர்தி செலுத்தும் அனுமதிப் பத்திரத்தினை வழங்கும் சர்வதேச நடைமுறைகளை மீறும் செயலாகுமென தெரியவருகிறது. விமானி ஒருவர் பயணிகள் விமானம் ஒன்றை செலுத்த வேண்டுமாயின் இலங்கையின் பொது வான் பறப்பு ஆணைக்குழுவிடம் இருந்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இச்சட்டமானது இலங்கையின் வான் படையினால் கையாளப்பட்டு வரும் "ஹெலி டுவர்ஸ்" விமானங்களுக்கும் ஏற்புடையது என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையின் பொது வான் பறப்பு ஆணைக்குழுவினால் இலங்கை வான்படை விமானிகளுக்கு பயணிகள் வானூர்தி செலுத்தும் அனுமதிப்பத்திரம் வழங்கும் போது சில விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டு வந்தாலும் பல எழுத்துப் பரீட்சைகளை சித்தியடைந்தால் மட்டுமே பயணிகள் வானூர்தியை செலுத்தும் அனுமதியைப்பெற முடியும் என்னும் நிலையே தற்போது வரை காணப்படுகிறது. சர்வதேச பொது வான் போக்குவரத்து அமைப்பின் வழிமுறைகளுக்கு அமையவே இலங்கையின் பொது வான் பறப்பு ஆணைக்குழுவினால் பயணிகள் வானூர்தியை செலுத்தும் பத்திரம் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்த அவ் ஆணைக்குழுவின் பணிப்பாளர் அதனை மீறும் எந்தவொரு முயற்சிக்கும் தான் ஒத்துழைக்கப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

## 13தி தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் முக்கிய கூட்டம்

13வது திருத்தம் தொடர்பாக ஆராயவென முஸ்லிம் காங்கிரஸ் முக்கிய கூட்டமொன்றை இவ்வாரத்தில் நடத்தவுள்ளது. கடந்த திங்கள் முதலாவது முக்கிய கூட்டத்தை நடத்தி முடித்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் அதன் மத்திய குழு கூட்டத்தை எதிர்வரும் வாரத்தில் நடத்தவுள்ளது என அதன் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார். 13வது திருத்தச் சட்டத்தை நீக்கினாலோ அல்லது மாற்றினாலோ அரசினை விட்டு முஸ்லிம் காங்கிரஸ் விலகிவிடும் என்ற வதந்தியை நம்ப வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். தமது கட்சி 13வது திருத்தச் சட்டத்தை கடுமையாக ஆதரிப்பதுடன் அத்திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் ஏதாவது மாற்றங்களை ஆதரிக்கப் போவதில்லை என்று மேலும் அவர் தெரிவித்தார்.


## இரண்டாவது விமான நிலையத்தில் முதலாவது கடத்தல் முறியடிப்பு

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள விமான நிலையத்தில் நடைபெற்ற கடத்தல் நடவடிக்கையொன்று கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ் விமான நிலையத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது கடத்தல் நடவடிக்கையாக பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கையின் வர்த்தகர் ஒருவர் பாங்கொக்கிலிருந்து இரத்தினக் கற்களையும் தங்க ஆபரணங்களையும் மத்தள சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகக் கடத்த முனைந்த போதே 12ம் திகதி கைதாகியுள்ளார்.

## நுளம்புகளுக்கெதிரான போர்ப் பயிற்சி – முப்படைக்கும் காவல்துறைக்கும்

டெங்கு நுளம்புகளைத் தேடிக் கண்டழிக்கும் விசேட போர் பயிற்சியினை இலங்கைக் காவல்துறையினரும் முப்படையினரும் பெற்றுக்கொள்ளவுள்ளனர் எனத் தெரியவருகின்றது. இதற்கான முன்னேற்பாடுகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளது. இப்பயிற்சி 12.6.2013ல் மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் ஆரம்பமாகியுள்ளது. இப்பயிற்சியில் 75 காவல்துறையினரும் விசேட அதிரடிப்படையினரும் இணைக்கப்பட்டுள்ளனர். இப்பயிற்சிக்கென மேலும் 200 ஆயுதப்படையினரும் இணைக்கப்படவுள்ளனர்.



## எக் நெலி கொட பிரான்சில் வசிப்பதற்கான எந்த ஆதாரங்களும் இல்லை – பிரான்ஸ் அரசு

மூன்று வருடங்களுக்கு முன் காணாமற்போன ஊடகவியலாளரான பிரகீத் எக் நெலி கொட பிரான்சில் வசிப்பதற்கான எந்தத் தடயங்களும் இல்லை என அந்நாட்டின் அரசு தெரிவித்துள்ளது. கொழும்பிலுள்ள பிரான்சிய தூதரகத்தின் பேசவல்ல அதிகாரி தெரிவிக்கும் போது தம்மிடம் அதற்கான சான்றுகள் எவையும் இல்லை என தெரிவித்தார். ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியின் புத்தள நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னான்டோ, எக் நெலி கொட பிரான்சில் வசிப்பதாக பாராளுமன்றில் தெரிவித்துள்ளார். அவ்வாறு தெரிவிக்கும்போது அவர், தான் அவரை சந்தித்ததாகவும் அவ்வாறு சந்திக்கும் போது எக் நெலி கொட தலையை முழுவதும் மொட்டை அடித்துவிட்டு இருந்ததாகவும் தெரிவித்தார். இதே கருத்தை மீண்டும் அவர் தொலைக்காட்சிச் சேவை ஒன்றுக்கும் தெரிவித்திருந்தார். எக் நெலி கொட மற்றொரு ஊடகவியலாளரான மஞ்சுள வெடிவர்த்தனவுடன் தன்னைச் சந்தித்ததாக தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் வெடிவர்த்தன தனக்கொரு நெருங்கிய நண்பர் என்றும் அத் தொலைக்காட்சி ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் கூறினார். உடனடியாக அத் தொலைக்காட்சி நிலையம் பிரான்சிலுள்ள வெடிவர்த்தனவுடன் தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியது. அப்போது வெடிவர்த்தன தனக்கு அருந்திக பெர்னான்டோ என்பவரை தெரியாது என்றும் அப்பெயருடைய எவரையும் பிரான்சில் சந்திக்கவில்லை என்றும் தொலைபேசிவாயிலாக தெரிவித்திருந்தார்.

இவ்வகைக் கருத்துக்களால் தானும் தனது குடும்பமும் கடும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதாக எக் நெலி கொடவின் மனைவி தெரிவித்துள்ளார். அவர் சனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் பெர்னான்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து உண்மையாயின் பிரகீத்தை உடனடியாக இலங்கைக்கு கொண்டுவர வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அது சாத்தியப்படாதவிடத்து பிரகீத்தைச் சந்தித்ததாகக் கூறும் நாடாளுமன்ற உறுப்பினர் அவரை எங்கு சந்தித்தார் என தெரிவித்தால் தாமே அவரை நேரடியாகத் தொடர்புகொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். பாராளுமன்ற வரப்பிரசாதங்களைப் பயன்படுத்தி பாராளுமன்ற உறுப்பினர் மக்களை திசை திருப்பும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார் என சுதந்திர ஊடக அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

## உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் மரம் நாட்டும் விழா

இவ்விழாவிற்கு முன்நாள் அதிபர் திரு.என்.இராஜநாதன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டார் அவருடன் அதிபர் திருமதி.ஐ.எம். முரளிதரன் ஆகியோரை படத்தில் காணலாம்



## உள்ளூர்ச் செய்திகள்

### கணவனை கத்தியால் குத்திய மனைவி

எட்டுமாத கர்ப்பிணியான மனைவி தனது கணவனை கத்தியால் குத்திய சம்பவமொன்று திருகோணமலை மொறவெள பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கணவரை கத்தியால் குத்திய குறித்த கர்ப்பிணிப்பெண் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 க்கு அழைப்பை ஏற்படுத்தி கணவன் தன்னை தாக்குவதாகவும் முறையிட்டுள்ளார்.

சம்பவத்தில் சிவில் பாதுகாப்பு படை வீரரான 24 வயதான டபிள்யூ.சம்பத் தெவனிபியவர என்பவரே படுகாயமடைந்துள்ளார். மகதிவுல்வெள பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தரப்பினர் தெரிவித்தனர்.

கணவரை கத்தியால் குத்திய மனைவி தன் வயிற்றில் கணவன் காலால் உதைத்ததாக கூறி அவரும் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

### பொலிஸ்மா அதிபர் இளங்கக்கோன் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு மேலதிக பாதுகாப்பு வழங்குவது தொடர்பான உயர்மட்ட மாநாட்டில் கலந்துக்கொள்வதற்காகவே இவ் விஜயம் அமைந்ததாக கூறப்படுகின்றது.

இக் கூட்டம், வியாழக்கிழமை திருகோணமலை ஆளுநர் செயலகத்திலேயே காலை 10 மணிக்கு இடம்பெற்றது. கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து விடுத்த வேண்டுகோளையடுத்து இம்மாநாடு இடம்பெற்றது.

இம்மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள், பொலிஸ் திணைக்கள உயர் அதிகாரிகள், பிரதி பொலிஸ் மா அதிபர்கள், உதவி பொலிஸ் மா அதிபர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மாகாண அமைச்சர்கள் உறுப்பினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டதையடுத்தே முதலமைச்சரால் இம்மாநாடு அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### மூவர் படுகாயம்

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி வந்துகொண்டிருந்த ரயிலுடன் முச்சக்கரவண்டி ஒன்று மோதி விபத்திற்குள்ளானதில் 3 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

திருகோணமலை, முள்ளிப்பொத்தானை பிரதேச 95ஆம் மைல் கல்லிலேயே ஞாயிற்றுக்கிழமை இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்த மூவரே படுகாயமடைந்துள்ளனர். இவ்விபத்தில் படுகாயமடைந்த மூவரும் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் பின்னரும் அடிமையாய் கிடக்கும் பெண்கள்

நாடோடி

## தென் சூடான் ஒரு பதிவு



மத்திய கிழக்கு ஆபிரிக்காவில் நான்கு புறமும் நாடுகளால் சூழப்பட்ட பிரதேசம் தென் பிராந்திய சூடான் எனத் தனது வரலாற்றுப் பெயரைக் கொண்ட நாடு தென் சூடான் மக்கள் குடியரசாக, ஒரு தனி நாடாக, ஜூலை 09, 2011 அன்று மலர்ந்தது. ஜூபா வைத் தலைநகராகக் கொண்ட இந்நாடு விடுதலையடைந்த போது மகிழ்ந்த ஈழத் தமிழரும் தமது மனக்கிடையும் என்றாவது ஒரு நாள் நடந்தேறும் என்னும் எண்ணத்தில் மேலும் நம்பிக்கை கொள்ள வைத்தது.

பொதுவாகவே விடுதலைப் போரில் ஈடுபடும் நாடுகள் விடுதலையின் பின்னர் உடனடியாகப் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையினை வரலாறு எமக்கு உணர்த்தியிருக்கின்றது. அதனிலும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் விடுதலையின் பின்னர் சில ஆண்டுகளுக்கு கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுகின்றன. உலகமயமாதலின் விளைவாக உடனடியாகவே விடுதலை அடைந்த நாடுகளில் தமது மறைகரங்களை வலுப்படுத்த அனைத்து வல்லரசு நாடுகளும் முன்நாள் காலனித்துவ ஆட்சி நாடுகளும் கடும் பிரயத்தனங்களை மேற்கொள்வது கண்கூடு.

அண்மையில் விடுதலையடைந்த தென்சூடானில் தற்போது எழுந்துள்ள பிரச்சனைகளில் ஒன்றாக குழந்தைத் திருமணம் காணப்படுகின்றது. குழந்தைத் திருமணங்களால் அந்நாடு நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய அறிக்கைகளின்படி 12 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகள் கூடத் திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர் என்பது தெரிய வருகின்றதுடன், 15 தொடக்கம் 19 வயதிற்குட்பட்ட அரைப்பங்குத் தென் சூடானியப் பெண்கள் திருமணம் முடித்துள்ளனர் என்பதும் அதிர்ச்சித் தகவலாகக் கசிகின்றது.

இரு மனம் இணைவது என்பது தென்சூடானின் காவியப் பரப்புக்களில் மட்டுமே வரையப்பட்டுள்ளது. உண்மை நிலையாதெனில் எவர் பெண்ணுக்கு அதிக சீர் வரிசை செய்கின்றாரோ அவருக்கே அவள் உரித்தாக்கப்படும் பாரம்பரியச் செயற்பாட்டின் மீது புதிய சுதந்திரம் எவ்வகையிலும் தாக்கத்தைச் செலுத்தவில்லை என்றே தெரிய வருகின்றது. இதனால் அங்கு நிகழும் திருமணங்களின் முன்னர் பெண்ணைப் பார்த்து பேசுதல் என்பதை எவ்வாறு இருக்கும் எனக் கற்பனை செய்து பார்த்தால் ஒரு திருமணச் சந்தையில் பெண்களை விற்கும் செயற்பாடு ஒன்றாகவே அதனைக் கருத முடிகின்றது. ஏனெனில் எவன் அதிக விலை கொடுத்து வாங்க முன்வருகின்றானோ அவனுக்கே அவள் சொந்தம் எனும் பாரம்பரியச் செயற்பாட்டால் அங்கு திருமண பொருத்தம் என்பதை சந்தையின் கேள்வி நிரம்பல் செயற்பாடுகளே தீர்மானிக்கும் போலத் தெரிகின்றது.

இப் பாரம்பரியத்தினால் பெண்களைக் கண்டவுடன் அவர்களது வயதைக் கருத்திற்கொள்ளாமல் விலை செலுத்தக் கூடியவன் வாங்கிச் செல்லும் நிலை காணப்படுவதால்தான் குழந்தைத் திருமணம் தென் சூடானில் அதிகரித்திருப்பதாக "ஹியூமன் ரைட்ஸ் வோட்ச்'' அமைப்பு தனது அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

வறுமையே இக் குழந்தைத் திருமணங்களை ஊக்குவிக்கும் மிக முக்கிய காரணியாக காணப்படுகின்றது. அத்துடன் உறுதியான சட்ட நிலைப்பாடுகளும் செயலாற்று நடவடிக்கைகளும் சுதந்திரத்தின் பின் தற்போது வரைக்கும் நிலை நாட்டப்படாமலிருப்பதும் குழந்தைகள் குழந்தைகளைப் பிரசவிக்கும் நிலைக்கு தென் சூடானைத் தள்ளிவருகின்றது.

ஜூலை 2011ம் ஆண்டில் 16 வயதான பெண் குழந்தையொன்று தனக்குக் கணவனாக்கப்பட்ட 50 வயதுக் கிழவனை ஏற்றுக் கொள்ள மறுத்த போது அப் பெண் குழந்தையிடம் அதன் தாய் சொன்னது "அந்தக் கிழவன் எமக்கெல்லோருக்கும் சாப்பாடு போடுவான். எனவே நீ அவனை மணக்கத்தான் வேண்டும்".

மற்றொரு 14 வயதுப் பெண்ணின் மாமனார் அப் பெண்ணைத் திருமணத்திற்கு வற்புறுத்தியபோது சொன்ன வாசகங்கள் "பெண்கள் எழும்புத் துண்டங்களே.... அவற்றைத் தின்று தீர்ப்பதே எங்களது கடன்.... நீ படிக்க வேண்டும் என்பதல்ல இங்கு முக்கியம் - எனக்கு உன்னைக் கொடுத்தால் கிடைக்கும் சீர்வரிசையே முக்கியம்'' என்று கூறி ஏற்கனவே மணமாகிப் பல குழந்தைகளுக்கு தந்தையான ஒருவனுக்கு மணக்கிழத்தி ஆக்கப்பட்டிருக்கின்றாள். அவளுக்கான சீர்வரிசையாக அவளது மாமன் பெற்றுக் கொண்டது சுமார் 75 பசு மாடுகள்.

மூன்று முக்கிய காரணிகள் சிறுபிள்ளைத் திருமணங்களை தென் சூடானில் ஊக்குவிப்பதாக அங்கியங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. குடும்பமொன்று தனக்குத் தேவையான மாடுகள், காசு மற்றும் வளங்களைத் திரட்டிக் கொள்ளும் வழிவகையாக பெண்குழந்தைகளை திருமணம் என்ற பெயரால் விற்பது முக்கிய காரணியாகும் என அந் நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் திருமணத்திற்கு முன்னரான உடலுறவினைத் தவிர்த்து விடுதல் என்பது இரண்டாவது காரணியாக உள்ளது. ஆனாலும் சில சிறுபராயப் பெண்குழந்தைகள் தாமாகவே திருமணத்திற்கு முன்வருவதற்கான காரணம் அவர்கள் அத் திருமணத்தின் ஊடாக தாம் அனுபவிக்கும் வறுமையிலிருந்து தப்பிவிடலாம் என்பதே என அவ்வறிக்கை மேலும் தெரியத் தருகின்றது.

அதிர்ச்சித் தகவலான ஐம்பது வீதமான 15 வயது தொடக்கம் 19 வயது வரையான சூடானியப் பெண்கள் திருமணம் முடித்திருப்பதானது அந் நாட்டின் சாபக்கேடாக உருவாகி வருவதை ஆதாரபூர்வமாக நிரூபித்திருப்பவை அங்கு நிகழும் மரணங்களே! இவ்வயதிற்கிடைப்பட்ட ஒவ்வொரு 100,000 பெண்களுள்ளும் சுமார் 2,100 பெண்குழந்தைகள் குழந்தைப் பேறு மற்றும் பிறப்புறுப்பு நோய்களால் மரணிப்பதாக புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

தென்சூடானின் சனத்தொகை எவ்வளவு தெரியுமா? 2008ம் ஆண்டில் சுமாராக 90 இலட்சம் மக்கள்.

# இலங்கை இளைஞர் பாராளுமன்றம் தெளிவும்.. நோக்கமும்.. – 2

இலங்கை இளைஞர் பாராளுமன்றத்தின் தெளிவும், நோக்கமும் எனும் இப்பகுதியில் இனி இம் மன்றின் தெரிவுமுறை பற்றியும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாகவும் விரிவான கருத்தாடல்களை முன்வைக்கலாமென்று நினைக்கிறேன்.

## வேட்பாளர் தெரிவு

இப் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மிகக்கட்டாயமாக தமது பிரதேச செயலாளர் எல்லைக்குள் உள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக உறுப்பினராக இருத்தல் வேண்டும். ஒரு கழகத்திலிருந்து ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களும் போட்டியிடலாம். குறிப்பாக இளைஞர் கழகத்தின் தலைவர் போட்டியிட்டாலன்றி ஏனைய உறுப்பினர் எவரேனும் போட்டியிடும் பட்சத்தில் குறித்த கழகத் தலைவரின் எழுத்துமூலமான அனுமதியைப் பெற்று இளைஞர் சேவைகள் மன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அத்தோடு வேட்பாளர்களின் நன்நடத்தையை உறுதிப்படுத்துவதற்காக கிராம சேவகரால் வழங்கப்படும் நன்நடத்தைச் சான்றிதழ், வேட்பாளர் வசிக்கும் பொலீஸ் எல்லைக்குள் உள்ள நிலையப் பொறுப்பதிகாரியின் நன்நடத்தைச் சான்றிதழ் என்பன கவனத்தில் கொள்ளப்படும். 17 - 29 வயதுக்குட்பட்ட இலங்கைப் பிரசை எவரும் மேற்சொன்ன தகுதிகளின் அடிப்படையில் இத்தேர்தலில் போட்டியிடலாம். இங்கு வேட்பாளர்களுக்கு ஆங்கில அகரவரிசைப்படி இலக்கங்கள் வழங்கப்பட்டிருக்கும். இளைஞர் கழகங்களின் இலட்சனைகளோடு அல்லது சின்னங்களோ இத் தேர்தலில் பயன்படுத்தப்படமாட்டாது.

## வாக்களிக்கத் தகுதிபெற்றோர்

இலங்கையின் இளைஞர் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்யும் வாக்காளர்கள் யார்? என்ன தகுதியின் அடிப்படையில் இவ் வாக்காளர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர்? என்ற வினா எல்லோருக்கும் இந்நேரம் வரையில் இருக்கும் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

இப் பாராளுமன்றுக்கு பிரதிநிதிகளை தெரிவுசெய்யும் வாக்காளர்கள் குறித்த பிரதேச செயலாளர் பிரிவுக்குள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களின் 15 - 29 வயதுக்குட்பட்ட உறுப்பினர்கள் மாத்திரமேயாவர். இங்கு குறித்த இளைஞர் கழகத்தின் அங்கத்துவ உறுப்புரிமை கவனத்தில் கொள்ளப்படும் வாக்காளர்களுக்கு பிரத்தியேகமாக எவ்வித அறிவிப்புக்களும் இளைஞர் சேவைகள் மன்றத்தால் வழங்கப்படமாட்டாது. மாறாக வேட்புமனுவை அங்கீகரித்தவுடன் வேட்பாளருக்கு தமது பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இளைஞர் கழகங்களின் தகவல்கள் வழங்கப்படும் அவ் இளைஞர் கழகங்களுக்கு பிரசாரத்திற்கென வழங்கப்பட்ட நான்கு நாட்களுக்குள் வேட்பாளர் தனது பிரசாரத்தை மேற்கொள்ள வேண்டும்.

வாக்காளர்கள் தேர்தல் தினத்தன்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்காக தேசிய அடையாள அட்டை, அஞ்சலடையாள அட்டை, கடவுச்சீட்டு என்பவற்றை பயன்படுத்தலாம். தவறும் பட்சத்தில் பிறப்பத்தாட்சிப் பத்திரமும் ஏற்றுக்கொள்ளப்படும். வாக்களிப்பு நிலையத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்திய உடன் வாக்காளர் தமது இளைஞர் கழக உறுப்புரிமையை அங்கிருக்கும் அதிகாரிகளிடம் உறுதிப்படுத்திய பின்னரே வாக்குச் சீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ் வருடம் இடம்பெற்ற இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இரண்டாவது இளைஞர் பாராளுமன்றத் தேர்தலுக்கு திருகோணமலை பட்டணமும் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட நாட்பத்தி மூன்று இளைஞர் கழகங்களைச் சேர்ந்த 4039 இளைஞர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருந்த போதிலும் 485 வாக்குகள் மட்டுமே பதிவாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தில்லைநாதன் பவித்ரன்
மனிதவள மற்றும் மூலதனவளப் பிரதி அமைச்சர்
இலங்கை இளைஞர் பாராளுமன்றம்




# இராவணன்

## திருக்கேதீசுவரம் 1930களில்..

இது தவிர திருமலை கோணேச்சரர் ஆலயம், கீரிமலை நகுலேஸ்வர ஆலயம், மாந்தோட்ட கேதீச்சர ஆலயம், சிலாபத்து முன்னீஸ்வரர் ஆலயம் என்பன நினைத்தவுடன் சென்றுவர முடியாத, மக்களே இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ள ஆலயங்களாகும். இவற்றுக்கு சென்றுவர பல கட்டுப்பாடுகள் இராணுவத்தினரால் விதிக்கப் பட்டுள்ளமையால் இக்கோவில்களுக்கு செல்லும் பக்தர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இந்த ஆலயங்கள் தவிர இராவணனுடன் தொடர்புடைய வேறு சில வரலாற்று எச்சங்களைப் பார்க்கலாம்.

## சிகிரியாக் குன்றம்

சிகிரியாக்குன்றமானது 6ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த காசியப்பனால் அமைக்கப்பட்டது என்றுதான் வரலாற்று நூல்களில் காணப்படுகின்றது. இருப்பினும் இராவணன் இறுதியாக ஆட்சி செய்த இடம் சிகிரியா, இராவணனின் மறைவுக்கு பின்னர் ஆட்சிப்பொறுப்பை பெற்றுக்கொண்ட விபீஸணன் தனது தலைநகரத்தை சிகிரியாவில் இருந்து களனிக்கு மாற்றினான். இன்றும் களனியில் உள்ள ஒரு 'விகாரையில் விபீஸணனின் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் இராவணனின் ஓலைச்சுவடியில் காணப்படுகின்றன என்று தினக்குரலில் அண்மையில் வெளிவந்த ஒரு கட்டுரையில் காணப்பட்டது.

## இராவணன் சிறியகோட்டை, பெரிய கோட்டை

இலங்கையின் தென்கிழக்குப் பகுதியில் கதிர்காமத்திலுள்ள கதிரைமலைமீது (ஏழுமலை) நின்று தென் கடலை நோக்கினால் குடா வடிவிலான கற்சிகரமும், கற்கொடியும் ஒன்று கடற்தளத்தின் மீது தெரிவதனை இன்றும் அவதானிக்கலாம். இந்த இரண்டு பாறைகளும் இராவணனின் சிறிய கோட்டை பெரிய கோட்டை என்று அழைக்கப்படுகின்றன.

## இராவணன் ஆட்சி

மகாவம்சதின்படி இலங்கையின் வரலாறு விஜயன் வருகையோடுதான் ஆரம்பிக்கிறது. இருப்பினும் அதற்கு முதலில் இயக்கர் நாகர் என்ற ஆதிக்குடிகள் இலங்கையில் வாழ்ந்ததாக மகாவம்சத்தில் கூறப்படுகின்றது. இவ்வாறு இலங்கையின் ஆதிக்குடிகளாக கருதப்படும் இயக்கர் நாகர் பற்றியும், இவர்களோடு இராவணனுக்கு உள்ள தொடர்புகள் பற்றியும் பல ஐதீகங்கள் பல உள்ளன.

*(இன்னும் நடுவோம்)*

செந்தூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியின்

# உலக வலம்

## அமெரிக்காவின் உளவு ரகசியங்கள் அம்பலம்

அமெரிக்காவின் உளவு ரகசியங்களை அம்பலப்படுத்திய முன்னாள் அதிகாரி மாயமாகி உள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் ஜனாதிபதி பராக் ஒபாமா அரசின் கட்டுப்பாட்டின் கீழ் தேசிய பாதுகாப்பு ஏஜென்சி (என்.எஸ்.ஏ) செயல்பட்டு வருகிறது. இந்த ஏஜென்சி பேஸ்புக், கூகுள், யாகூ ஆகியவற்றில் அமெரிக்கர்கள் வெளிநாட்டவர்களுடன் மேற்கொண்ட தகவல் பரிமாற்றங்கள் மற்றும் அமெரிக்கர்களின் தொலைபேசி உரையாடல்களை ரகசியமாக பதிவு செய்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது. நாட்டின் பாதுகாப்பு கருதியும், பயங்கரவாதத்தை எதிர்கொள்ளவே இந்த நடவடிக்கை என அமெரிக்க விளக்கம் அளித்துள்ளது. இந்நிலையில் அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ வில் கணனி நிபுணராக பணியாற்றிய எட்வர்டு ஸ்னோடன், உளவு ரகசியங்கள் பலவற்றை கார்டியன் பத்திரிகை மூலம் அம்பலப்படுத்தியதாக தெரிவித்தார்.

இதனால், அமெரிக்க அரசால் எட்வர்டு கைது செய்யப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே இணையதள சுதந்திரத்தை மதிக்கும் நாட்டில் தஞ்சமடைய உள்ளதாக தெரிவித்துள்ள எட்வர்ட் ஸ்னோடன், அயர்லாந்தில் தஞ்சமடைய விருப்பம் தெரிவித்துள்ளார்.

## மனித இரத்தத்தை குடிக்கும் வினோதப் பெண்

அமெரிக்காவை சேர்ந்த பெண் தினமும் இரண்டு லிட்டர் மனித ரத்தம் குடிப்பதை வழக்கமாக கொண்டுள்ளார். அமெரிக்காவின் பென்சில்வேனியாவை சேர்ந்தவர் ஜூலியா கேப்லஸ்(வயது 45). இவர் கடந்த 30 ஆண்டுகளாக மனித ரத்தத்தை குடித்து வருகிறார்.

நண்பர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்தினர் என பலரும் ஜூலியாவிற்கு தங்கள் ரத்தத்தை இலவசமாக வழங்குகின்றனர்.



15 வயதில் தன் காதலனை முத்தமிட்ட போது ஆர்வத்தில் அவரின் உதட்டை கடித்து விட்டதாகவும், அப்போது கண்ட ரத்தத்தின் ருசி தன்னை இன்னும் விடவில்லை என ஜூலியா தெரிவித்துள்ளார்.

ரத்தத்தில் ஏராளமான சத்துக்கள் இருப்பதால், இதை பருகுவதின் மூலம் தான் மிகவும் இளமையுடனும், புத்துணர்வாகவும் இருப்பதாகவும் தெரிவிக்கிறார்.

உறவினர்கள் மற்றும் நண்பர்களிடமிருந்து ரத்தம் குடிப்பதற்காக தானே பிரத்யேகமான முறையில் ஊசி ஒன்றை தயாரித்துள்ளார். இதைக் கொண்டு அவர்களின் உடலில் சிறிய துளையிட்டு நேரடியாக ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கிறார். சில நேரங்களில் ரத்த வங்கிக்கு சென்று விலை கொடுத்து வாங்கியும் ரத்தம் குடிக்கிறார். இவருக்கு ரத்தம் கொடுக்க ஏராளமான நபர்கள் காத்திருக்கின்றனர்.

## சுவிட்சர்லாந்தில் கடுமையாகும் புகலிடச் சட்டங்கள்

சுவிட்சர்லாந்துக்குள் புகலிடம் தேடி வருவோருக்கான சட்டங்களைக் கடுமையாக்க வேண்டும் என்ற பொது வாக்கெடுப்பில் மக்கள் 57 சதவீதம் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இந்த வாக்கெடுப்பை GFS.BERN என்ற கருத்துக்கணிப்பு மையம் மூலமாக சுவிஸ் ஒலிபரப்பு அலுவலகம் நடத்தியுள்ளது. இந்த பொது வாக்கெடுப்பு முறைக்கு முடிவெடுக்க தெரியாதவர்களின் எண்ணிக்கை 48 சதவீதம் இருந்து 57 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மேலும் சட்டங்கள் கடுமையாக்கப்பட வேண்டாம் என்று கருதியவர்களின் எண்ணிக்கை 29 சதவீதமாகவே தொடர்கிறது. இதில் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

அதிகரித்து வரும் புகலிடம் நாடி வருவோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த மத்தியக் கூட்டரசும், சுவிஸ் நாடாளுமன்றமும் இந்தச் சட்டங்கள் கடுமையாக்கப்படுவதை ஆதரித்துள்ளன.

மேலும் சட்டங்கள் கடுமையாக்கப்படுவதை எதிர்ப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்ததால் சுவிட்சர்லாந்தின் புகலிடம் வழங்கும் முறையில் கோளாறுகள் தோன்றும் என்று தெரிவிக்கின்றனர்.

## மருத்துவமனையில் மண்டேலா

தென்ஆப்பிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா நுரையீரல் பாதிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மண்டேலாவின் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. ஆயினும் அவர் அபாய கட்டத்திற்கு செல்லவில்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அவரது உடல் குணமடைய வேண்டி தென் ஆப்பிரிக்க மக்கள் பிரார்த்தனை செய்து வருகின்றனர். ஆனால், அவரது உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

நான்கு நாட்களாக தீவிர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதனால் இவருக்கு மருத்துவமனையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.


**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில்**
**தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான**
**இலவச கருத்தரங்கு**
**காலம்: 16.06.2013**
**திருகோணமலை நகராட்சி மண்டபம்**
**நேரம்: காலை 8.30 — 12.00**
**மாலை 2.00 — 05.30**
**தொடர்புகளுக்கு:**
செந்தூரன் — 0773303245
குமணன் — [illegible]
தயா — [illegible]


## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 19

பிரதீபா

1. உவர்த்தன்மை உள்ள மண்ணில் செழிப்பாக வளரக்கூடிய தாவரம்?
   1. தென்னை   2. பனை   3. வேம்பு
2. புல்லாங்குழலில் உள்ள துளைகளின் எண்ணிக்கை?
   1. ஏழு   2. ஆறு   3. எட்டு
3. நில்வளகங்கை உற்பத்தியாகும் இடம் எது?
   1. மத்தியமலை நாடு   2. இறக்குவானைக் குன்று   3. சிவனொளிபாத மலை
4. பேதுருதாலகால மலைக்காடு அமைந்துள்ள மாவட்டம் எது?
   1. கண்டி   2. காலி   3. நுவரெலியா
5. நத்தையின் இயற்கை எதிரியாகக் கருதப்படுவது எது?
   1. செண்பகம்   2. கழுகு   3. பாம்பு
6. நீரிழிவு நோயாளிகள் உண்ணக் கூடாத உணவு எது?
   1. கடலை   2. முட்டை   3. கோவா
7. வேர்த்துண்டங்களின் ஊடாக புதிய கன்றினைப் பரப்பும் தாவரம் எது?
   1. மிளகு   2. கறிவேப்பிலை   3. கொய்யா
8. இன்றைய நவீன தொழினுட்பத்திற்கு சவால் விடக்கூடிய இராட்சத கால்வாயை அமைத்த மன்னன் யார்?
   1. தாதுசேனன்   2. மகாசேனன்   3. பராக்கிரமபாகு
9. இராட்சதப் புல் என அழைக்கப்படும் தாவரம் எது?
   1. கோரை   2. கடுபுல்   3. மூங்கில்
10. நம் நாட்டுத் தபால்களில் தபால் பெட்டியில் இடப்படாத தபால் எது?
   1. சாதாரண தபால்   2. வெளிநாட்டுத் தபால்   3. பதிவுத்தபால்

கீழ் உள்ள அட்டவணையை அவதானித்து விடையினைத் தெரிவு செய்க.

| அ | ஆ | இ |
|---|---|---|
| பந்து | சாரம் | நட்டம் |
| தந்து | காரம் | தட்டம் |
| சந்து | வாரம் | மட்டம் |
| கந்து | தாரம் | கட்டம் |
| வந்து | பாரம் | பட்டம் |

11. நிரல் அ வில் சேர்க்க முடியாத சொல் எது?
   1.மந்து   2. நந்து   3. ஐந்து
12. நிரல் இ யில் சேர்க்க முடியாத சொல் எது?
   1. வட்டம்   2. சட்டம்   3. பதட்டம்
13. நிரல் ஆ வில் சேர்க்க முடியாத சொல் தெு?
   1. நாரம்   2. ராகம்   3. மாரம்
14. விழாக்காலங்களில் பொருட்களின் விலை அதிகரிக்கும். இதற்கான காரணமாக இருக்கக்கூடியது எது?
   1. விழாக்காலங்களில் மக்களிடம் பணம் அதிகம் இருக்கும்
   2. விழாக்காலங்களில் பொருட்களிற்கான கேள்வி அதிகரிக்கும்
   3. விழாக்காலங்களில் அதிக பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதால்
15. "பகைவன் தூரத்தில் வருவதைக் கண்ட குருடன் மரத்தின் பின்னால் மறைந்தான்". இக்கூற்று பிழையாவதற்கான விடை யாது?
   1. குருடர்களிற்கு பகைவர்கள் இல்லை.
   2. ஒழித்துக் கொள்வதற்கு மரம் போதாது
   3. குருடர்களிற்கு கண் பார்வை இல்லை
16. ஒரு கோழியின் விலை 14 குஞ்சுகளின் விலைக்குச் சமமாகும். ஒரு குஞ்சின் விலை 15 முட்டைகளின் விலைக்குச் சமமாகும். 4 முட்டைகளின் விலை ரூ 60 எனின், கோழியின் விலை யாது?
   1. ரூ 225   2. ரூ 3100   3. ரூ 3150
17. பாடசாலை ஒன்று தனது பொன் விழாவினை 1990ம் ஆண்டு கொண்டாடியது. எனின், அது தனது பவள விழாவைக் கொண்டாடும் ஆண்டு எது?
   1. 2065   2. 2015   3. 2075
18. வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக குமார் தனது உறவினர்கள் மூலம் பணம் சேகரித்தான். அதில் தந்தை கொடுத்த பணம் ரூ 5500 ஆகும். அண்ணன் கொடுத்த பணம் தந்தை கொடுத்த பணத்திலும் பார்க்க ரூ 1500 இனால் கூடியது. தங்கை கொடுத்த பணம் தந்தை கொடுத்த பணத்திலும் ரூ 1500 இனால் குறைவானது ஆகும். எனின், குமாரிற்கு மூவரின் மூலமும் கிடைத்த மொத்தப் பணம் யாது?
   1. ரூபா 18000   2. ரூபா 16500   3. ரூபா 16050
19. 9431 உடன் 100 ஐக் கூட்டும் போது கிடைப்பது?
   1. 9531   2. 9541   3. 9441
20. ஒரு பண்ணையில் உள்ள மாடுகளின் எண்ணிக்கை 750 ஆகும். அங்குள்ள ஆடுகளின் எண்ணிக்கை மாடுகளின் எண்ணிக்கையைப் போன்று இரு மடங்காகும். அங்கு உள்ள வாத்துக்களின் எண்ணிக்கை ஆடுகளின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் 30 அதிகமாகும். பண்ணையில் உள்ள மூன்று உயிரினங்களினதும் மொத்த எண்ணிக்கை யாது?
   1. 3780   2. 378   3. 3870

பெயர்: ..........................................................
..........................................................
முகவரி: ..........................................................
..........................................................
..........................................................
பாடசாலை: ..........................................................

### தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிற் போட்டி

மேலுள்ள கேள்விகளுக்கான சரியான விடைகளை குறித்து அனுப்பி வாராந்தம் பரிசில்களை வெல்லுங்கள்.

மேலுள்ள கேள்விப் பகுதியை நிரப்பி வெட்டி அதனை மலைமுரசு, இல 159 A, கடல் முக வீதி திருக்கோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வாராந்தம் பரிசுகளை வெல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியற் சதுரங்கப் பலகையில் ஆடும் 13 தி

மாயன்

வட மாகாண சபையின் தேர்தலை நடாத்த வேண்டிய தேவை அரசிற்கு எழுந்தவுடனேயே அரசியற் சதுரங்கத்தின் நடுப்புள்ளிக்கு நகர்ந்துள்ளது 13வது திருத்தச்சட்டம்.

தமிழர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வொன்றைக் கண்டாகவேண்டிய தேவை இந்திய அரசிற்கு ஏற்பட்டிருந்த நிலையில் பொருத்தமான தீர்வொன்றாக அன்றைய காலகட்டத்தில் இலங்கை மற்றும் இந்திய அரசுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமான அதிகாரங்களை மத்திய அரசிலிருந்து மாகாணங்களுக்குப் பகிர்வது சாலப் பொருத்தமாக இருக்கும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

அவ்வாறு அதிகாரங்களைப் பகிர்வதற்குப் பொருத்தமாக வலுவுள்ள மக்களாட்சி அமைப்பொன்றையும் உருவாக்கிக்கொள்ள வேண்டியிருந்தது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கும் போது ஏன் மற்றொரு அதிகார அலகு தேவையாக இருக்கின்றது என்பதை நாம் எப்போதுமே புரிந்துகொள்ள முடியும். அரச திணைக்களங்கள் யாவும் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே உருவாக்கப்பட்டன என்பது கொள்கையளவில் மட்டுமே காணப்படுகின்றது. அத் திணைக்களங்களை நிர்வகிக்கும் மத்திய அரசின் அமைச்சர்களுக்கு அடிநிலை மக்கள் அனைவரதும் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ளப் போதுமான கால அவகாசம் இல்லாததால் அதனை நிவர்த்திப்பதற்காக மாவட்டங்களை இணைத்து மாகாணங்கள் ஆக்கி அவற்றை நிர்வகிப்பதற்காக மாகாண அத்காரஅலகினை உருவாக்குவது சரியானதாகவே அப்போதைய அரசிற்குப் பட்டது. இதற்குக் காரணம் தனியே தமிழரின் பிரச்சனை மட்டுமல்ல என்பதை நாங்கள் அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும். அக்காலப் பகுதியில் தெற்கில் மிக வேகமாக எழுந்த மக்கள் விடுதலை முண்ணனியின் ஆயுதப் போரும் தான் என்பதே உண்மை.

அவ்வாறான சிந்தனையில் இந்திய நிர்வாக அலகுகளை ஒத்த நிர்வாக அலகுகளை இலங்கையில் ஏற்படுத்த முனைந்தவொரு செயற்பாட்டில் உருவாகியதே மாகாண சபைகள் ஆகும்.

இந்தியச் சிந்தனையில் உருவான மாகாண சபை முறையானது 13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக சட்டவலுவைப் பெற்றுக்கொண்டது. அத்துடன் காவல்துறை, காணிப் பங்கீடு, உள்ளடங்கிய சுதந்திர நிர்வாக கட்டமைப்புக்களைக்கொண்ட முழுப் பலம் பெற்ற நிர்வாக அமைப்பான மாகாணசபைகள் உண்மையிலேயே அவற்றிற்குரித்தான சட்ட, அதிகார வலுவுடன் உருவாக்கப் பட்டிருக்கு-மானால் பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைக் கொடுத்திருக்கும் என்பது நம்பத்தகுந்ததே. ஆனால் அவ்வாறு உருவாக்கப்பட்டிருந்தால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதியின் வலு (Power) எழுத்தில் குறைக்கப்-பட்டிருக்காது போனாலும் செயற்பாட்டில் குறைக்கப்பட்டிருக்கும் என்பது உண்மைதான்.

1989ம் ஆண்டில் தமது அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ளப் போராடியவர்களான மக்கள் விடுதலை முண்ணனியின் ஆயுத பலம் அழிக்கப்பட்ட பின்னர், 2009ம் ஆண்டில் தனிநாட்டைக்கேட்டுப் போராடிய தமிழர் ஆயுதப் படையின் ஆயுத வலுவும் அழிக்கப்பட்டது.

இவ்விரு போரிடும் வலுக்களும் அழிக்கப்பட்ட பின்னர் மாகாண ஆட்சி அதிகாரம் என்பதை எந்த சனாதிபதிதான் விரும்புவார்?

ஆனால் சர்வதேசத்தின் பார்வையில் யாதாயினும் ஒரு வகையான ஆட்சிஅதிகாரத்தை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டிய தேவை அரசிற்கு இருந்துகொண்டேயிருக்கின்றது. எனவே அவ்வாறான அதிகார அலகொன்றைப் போதுமான அளவு அதிகாரங்களுடன் கையளித்தால் அக் கையளிப்பு அரசிற்கு அச்சுறுத்தலாகவே இருக்கும். ஏனெனில் 9 மாகாண சபைகளில் 8 மாகாண சபைகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ள ஆளும் தரப்பு 9வது மாகாண சபையான வடமாகாண சபையை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியாது போகும் ஏனெனில் வடமாகாண சபையின் ஆட்சியதிகாரத்திற்குள் வரும் பெரும்பான்மையினர் தமிழர்களாக இருப்பதுடன் அவர்களது விருப்புக் கட்சியாக ஐந்து தமிழ்க் கட்சிகள் இணைந்துள்ள தமிழத் தேசியக் கூட்டமைப்பாகவே உள்ளது. எனவே வட மாகாண சபையில் ஆட்சியமைக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அரசிற்குச் சிம்ம சொப்பனமாகவே இருக்கும். அதன் முக்கிய வினையாக சிறுபான்மைத் தமிழர்களின் நலன்களுக்கு எதிராக மத்திய அரசு மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும் எதிர்த்து நிற்கும் முடிவை வடக்கு மாகாண சபை எடுக்கும் என்பதால் வடமாகாண சபையின் தேர்தலை நடாத்த முன் 13வது திருத்தச் சட்டமூடாக வழங்கப்பட்டுள்ள சில அதிகாரங்களை நீக்கிக்கொள்ள அரசு கடும் முயற்சியில் உள்ளது.

இவ்வாறு வடக்கிற்கான அதிகாரங்களை நீக்குவதற்கு அரசு மயற்சிப்பதற்கான வரலாற்றுக் காரணங்கள் இரண்டு உள்ளன.

முதலாவது வடகிழக்கு மாகாண சபையின் இரண்டு நடவடிக்கைகளே அவையாகும். முதலாவது வடகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் திரு. வரதராசப்பெருமாள் அவர்கள் 01.03.1990ல் வடகிழக்கு மாகாண சபையில் தமிழ் ஈழநாட்டுக்கான முன்மொழிவைக் கொண்டுவந்து அதனை வெற்றி பெறச் செய்தார். இரண்டாவதாக அவர் பொதுத் தன்னார்வப் படை (Civil Voluntary Force -CVF)என்ற இராணுவ அமைப்பை இந்திய இராணுவ ஆதரவுடன் உருவாக்கி அப் படையினைப் பின்னொருநாளில் தமிழ்த் தேசிய இராணுவம் எனப் பெயரிட்டு தமிழர்களுக்கான அரச அங்கீகாரத்துடன் உருவாக்கப்பட்ட மாகாணசபையின் இராணுவமாக அதனைப் படைத்திருந்தார்.

இந்த இரு நடவடிக்கைகளாலும் தமிழருக்கென்று ஒரு மாகாண சபை உருவாகினால் அதன் செயற்பாடு எக்கணத்திலும் மாற்றமடைந்து அரசிற்கு எதிராகக் [illegible] வழிவகைகளை[illegible] அரசு எண்ணத் தலைப்பட்டுள்ளது.

அத்துடன் வடமாகாண சபை தமிழரின் கைகளில் விழுமாயின் அரச நடவடிக்கைகளுக்கு எதிராக, உதாரணமாக காணி கையாள்கைக்கு எதிராக, சட்ட நடவடிக்கைகளை அம் மாகாண சபையே தனது நிதியினைக் கொண்டு மேற்கொள்ளும் வாய்ப்பும் காணப்படும். இதனால் அரச நிதியைக் கொண்டு அரசிற்கு எதிராகச் செயற்படும் மாகாண சபையை அரசே உருவாக்கிக் கொண்டிருக்கும்.

மேலும் வடமாகாண சபை தமிழர்களின் ஆட்சிக்குட்பட்டிருக்கும் போது அதனது குரல் சர்வதேச ரீதியில் மேலும் வலுக்கொண்டதாக அமைவதுடன் அம்மாகாண சபையின் செயற்பாடுகளைச் சர்வதேம் எப்போதுமே அவதானித்துக் கொண்டும் இருக்கும். இவையாவும் அரசிற்கு எப்போதுமே தலையிடியைக் கொடுக்கும் விடயங்களே.

அத் தலையிடியினைச் சிறிதளவேனும் நீக்குவதற்காகவே மாகாண சபை அதிகாரங்களை குறைக்கும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. எனினும் அவ்வாறானதொரு செயற்பாட்டிற்கு பாராளுமன்றில் சுமார் 150 வாக்குகள் தேவையாக இருக்கும்.

தற்போது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கட்சிகள் அனைத்தும் கொண்டுள்ள ஆசனங்களின் மொத்த எண்ணிக்கை 161 ஆக உள்ளது. 13வது திருத்தச் சட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவதை எதிர்க்கும் ஆசனங்கள் 12 ஆக காணப்படுகின்றது. எனவே மூன்றிலிரண்டு பெரும்பான்மையை அரசு இவ்விடயத்தில் பெற்றுக்கொள்ள முடியாது போயுள்ளது. அதனால் இவ்வாறு 13தி யில் மாற்றம் செய்வதைஅரசு தற்காலிகமாகப் பின்போட்டுள்ளது. அத்துடன் வடமாகாண சபைத் தேர்தல்களையும் அரசு பின்போட்டுவிடும் என்றே தெரிகின்றது.

ஆனாலும் அவ்வளவு சுலபமாக இப் 13தி யை மாற்றியமைக்க முடியுமா என்பது கேள்விக் குறியே. ஏனெனில் ஐக்கிய நாடகள் சபையின் தற்போது நடைபெற்றுவரும் மனித உரிமைக் கூட்டத் தொடரில் 13.06.2013ல் அமெரிக்க தூதுவர் உரையாற்றும் போது “ இலங்கை பொறுப்புக் கூறுதலிலும் நல்லிணக்கத்திலும் எவ்வாறு செயற்படுகின்றது என்பதை மிகக் கவனத்துடன் பார்த்துவரும் அமெரிக்கா மீண்டும் எவ்வகையான நடவடிக்கைகளை மனிதவுரிமைச் சபையில் எடுக்கவேண்டும் என அதனடிப்படையில் தீர்மானிக்கும்” என்று தெரிவித்துள்ளார், எனவே 13 தி யில் கைவைப்பது என்னவோ தீயில் கைவைப்பது போலவே அரசிற்கு உள்ளது.

அத்துடன் இம்மாற்றங்கள் தொடர்பாக பேச்சுக்களை நடாத்தவென இந்தியா நோக்கித் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று பயணமாகவுள்ளதாக த.தே.கூ அறிவித்துள்ளது.

இந்த ஆடு புலி ஆட்டத்தில் [illegible] 13 தி தப்பிக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியாவது ஒரு விதி செய்வோம்

பத்மபிரஸன்

தேடிவந்த பறவைகட்கும்
நாடி வந்த மனிதர்க்கும்
இன்னும் பல உயிர்கட்கும்
எரிகின்ற அக்கினிக்கும்
தரிப்பதற்கும் புசிப்பதற்கும்
என் கிளைகள் பயன்பட்டன
என்ற சேதியை யேனும்......

அன்றொருநாள் எங்கோ ஓரிடத்தில்
சிறகு யிரி ஒன்று கனி தின்று
இங்கோர் நாள் இட்ட எச்சத்தில்
முறைவிட்டவன் நான் என்ற
வரலாற்றின் ஒரு துளியையேனும்......

முன்னொரு பொழுதுகளில்
என்னைப் பேரம்பேசி
ஆயுதங்களுடன் நின்ற
அந்த கறுப்பு நிமிடங்களில் கூட
தங்கள் ஆடைகளின் பின்புறத்தில்
என் இன்தான் ஒருவனின்
உதிரத்தின் ஈரம் கசிந்தெழுந்தது
என்பதேனும்.......

அவர்கள் அடியோடு
தறித்து விட்டதாகக் கூறும்
அடிக்கட்டையில் என் உணர்வுகள்
உயிரோடிருந்து நான்
மீண்டும் மரமாவேன் என்பதேனும்......

அவர்கள் அறிந்திருக்க மாட்டார்கள்
நிச்சயமாக
ஆனாலும் நீங்கள் என்
மனவலிகளின் ஓலங்களை
என் வரலாற்று நிமிடங்களை
என் ரணங்களை
அதற்கப்பாலும்
மனிதம் உள்ள மனிதர் என்பதால்.....

நீங்கள் அறிவீர்கள்
நிச்சயமாக - ஆதலால்
இனியாவது ஒரு விதி செய்யுங்கள்
என்னைத் தறிக்க இருக்கும்
கொலைக் கோடரிகளுக்கு
எவ்விதத்திலும்
இடம்பொடுப்பதில்லையென்று......

நீங்களும் எழுதலாம் 23வது இதழ்

## ஒரு கவிதை குலைகிறது

விஸ்வமித்ரன்

விண்ணகத்தின் வண்ணப்
பறவைகள்
சிறகடிக்கின்றன.........
சிந்தனைப் புள்ளில் சிலிர்ப்புகள்
கோடி உதிர்கின்றன......
கவிதை மலர்கின்றது
கன்களில் கனவு ஒளிர்கின்றது......
காலம்
இனிமையான ஒரு நவீனம் போல்
அசைகின்றது.

மார்கழிப் பனிபோல்
நெஞ்சைக் கவ்விய ஒரு
குளிர்ச்சியில்
இதயம் மென்மையாகி
விம்முகின்றது...........

நாட்களின் அசைவு திடீரென
உடைப்பெடுத்த வெள்ளமாய்ப்
போய்விடுகின்றது.........

இதயம் உடைகின்றது
உதிரம் பாய்கின்றது.
உள்ளம்
ஓலக்குரலெடுத்து அரற்றுகின்றது

இதயப் பூங்கனவுகளை சோகமென்ற
கருந்திரை மூடுகின்றது
ஒரு தாங்க முடியாத வெறுமை
துணையாய் வருகின்றது.

தோல்விகள் நெஞ்சில்
கனக்கின்றன......
துயரங்கள் நெஞ்சை எரிக்கின்றன.....
மனம் என்ற பூ
மணமிழந்து காய்ந்து சருகாகின்றது...
கட்டற்ற வாழ்க்கையோட்டம்
முட்டுவதும் மோதுவதுமாய்
உள்ளத்தைப் படாதபாடு
படுத்துகின்றது
காலம் சுழல்கின்றது
கவிதை குலைகிறது...
கருப்பொருள்
கண்ணில் மெல்ல மறையும்
ஒரு பிரமையில் உள்ளக்
குழந்தையின் ஏக்கப் பெருமூச்சுக்கள்
நீலவானில் நிறைகின்றன...
நான் என்னை இழக்கிறேன்

# கற்பகப் பிள்ளையார் ஆலய..

உள்ளவர்கள் யாரென்பது குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே வெளியாகும்.

கிழக்கு மாகாணத்தில் சைவ சமயத்தவர்க்குச் சொந்தமான ஆலயங்கள் தாக்குதலுக்கு உள்ளாவது சர்வசாதாரணமாக நடைபெற்று வரும் இவ்வேளையில் திருகோணமலை நகரப்பகுதியில் இத்தாக்குதல் எவ்வாறு திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது என்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

இச்சிலையுடைப்பு விவகாரம் தொடர்பாக தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள கிழக்கு மாகாண சபையின் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் திரு. ஜனார்த்தனன் அவர்களின் கண்டன அறிக்கை வருமாறு:...

திருகோணமலை மாவட்டத்தின் நகரமையப்பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் கோபுரமானது புனருத்தாபனப் பணிகளுக்குட்படுத்தப்பட்டு வருகின்ற வேளையில் கோபுரத்தில் காணப்பட்ட பதின்மூன்று சிலைகள் நாசகார சக்திகளால் இடித்தழிக்கப்பட்டுள்ளன. இம்மாதிரியான சிலை இடிப்புச்சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் அண்மைக்காலங்களில் அரங்கேறி வருகின்றன.மிகவும வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டிய இத்தகைய செயல்கள் யாரால் எந்தநோக்கத்திற்காக செய்யப்படுகின்றனவென்பதை இன்னமும் பொலிஸார் கண்டறியவில்லை. நான்நேரடியாக இவ்வாலயத்தைச்சென்று பார்வையிட்டவேளை பொலிஸார் ஆலய வளாகத்திற்கு வருகை தந்து புகைப்படங்களை எடுத்துச்சென்றதாக. அறிகின்றேன். ஆனாலும் இத்தகைய ஆரம்ப கட்ட விசாரணைகள் பூசிமெழுகப்பட்டுவிடாது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவேண்டும்.

திருக்கோணேச்சரநாதர் கோவில் கொண்ட திருகோணமலை மாவட்-டத்தில் பல்வேறு பிரசித்தமான ஆலயங்கள் காணப்படுகின்றன. நகரமையத்தில் கடற்காட்சி வீதியை அண்மித்த ஆலயத்துக்கே இந்நிலைமையெனில் ஏனைய ஆலயங்களின் பாதுகாப்பு கேள்விக்குரியாகவே உள்ளது. இந்து மத ஆலயங்கள் மட்டுமல்ல எந்த மத வழிபாட்டுத்தலங்களாயினும் அவை புனிதமாக மதிக்கப்படவேண்டியவை, போற்றப்படவேண்டியவை, பாதுகாக்கப்படவேண்டிவை. திருகோணமலை மாவட்டத்தில் பல மதங்களைச் சார்ந்த மக்களும் சமாதானமாக பன்னெடுங் காலமாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் சிலையுடைப்புச் சம்பவமானது இனரீதியான முறுகல்களுக்கு வழிகோலுவதாக அமையலாம். நாடாளாவிய ரீதியில் பௌத்த மதஞ்சாரா வழிபாட்டுத்தலங்களுக்கெதிராக பல்வேறு தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இதற்கான தார்ப்பரியங்கள் இன்னமும் புரிந்த பாடில்லை. இந்து, கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் ஏனைய மதங்களின் கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் பன்மைத்துவ காலாசாரங்களையுடையது நமது நாடு.

நமது நாட்டுப்பிரசைகளின் கலாசாரங்களைப் பேணவேண்டிய கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்குள்ளது.

ஒரு மக்கள்குழுமத்தை அநாதையாக்கிவிடுவதற்கு அவர்களை அழிப்பதை விட அவர்களின் பாரம்பரிய விழுதுகளை வேரற்றதாக்கி விடுவது சிறந்த வழியென உணர்ந்த இனந்தெரியாத கும்பலால் இத்தகைய சிலையுடைப்புச் சம்பவங்கள் காய் நகர்த்தப்படுகின்றன. அதுமட்டுமன்றி மட்டக்களப்பில் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் புத்தர் சிலைகளும் தாமாகவே முளைத்துக்கொள்கின்றன. சிலைகளை உடைப்பதும் சிலைகளைப் படைப்பதும் நவீன இன மோதலுக்கான வியூகங்களாகி விட்டன. ஆனால் சிலைகளைப் படைப்பதொன்றும் திருகோணமலை நகருக்கு புதியதல்ல. கற்பகப் பிள்ளையார் ஆலயமானது அவ் ஆலயத்தைச் சூழ வாழும் மக்களின் உழைப்பால் கட்டியெழுப்பப்பட்டதாகும். தற்போது நடந்து வருகின்ற புனருத்தாரணப் பணிகளும் சாதாரணமான மக்களின் வியர்வையைப் பணமாக்கி செய்யப்பட்டுவருகின்ற வேளையில் இம் மாதிரியான செயல்கள் அவர்களை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளன. ஆகவே நல்ல உள்ளங்கள் இவ்வாலய திருப்பணிக்கு உதவ முன்வரவேண்டும் என்பது என் அன்புக்கோரிக்கையாகும். இத்தகைய செயல்கள் எதிர்காலத்தில் நடைபெறாமலிருப்பதை உறுதிசெய்ய வேண்டுமெனின் தற்போது நடைபெற்ற சம்பவத்தின் சூத்திரதாரிகள் கட்டாயமாகக் கண்டுபிடிக்கப்படவேண்டும் அதற்கு பொலிஸார் தகுந்தவண்ணம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

# கண்பார்வையை மேம்படுத்த..

மற்றும் தடயம் மக்கள் உதவி அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து 15.6.2013 அன்று கந்தளாயிலும், 16.06.2013 அன்று சேருநுவர விலும் கண்பார்வைக் குறைபாடுடைய மாணவர்களைப் பரிசோதித்து கண்பார்வைக் குறைபாடுகளைக் கண்டு பிடிப்பதுடன் தேவையுள்ள வறிய மாணவர்களுக்கு 150 கண்ணாடிகளை இலவசமாக வழங்கும் செயற்பாட்டையும் முன்னெடுக்கவுள்ளன.

# தாலிக்கொடி ஒப்படைப்பு..

தங்கச் சங்கிலியை பாதுகாப்பாக பெட்டி ஒன்றில் வைப்பது வழக்கம்.

அன்றும் அவர் தனது சங்கிலியைக் கழற்றி பெட்டியோரமாக வைத்துள்ளார். பின்னர் கணவர் உண்பதற்காக சந்தையில் வாங்கிவந்த வத்தகைப் பழத் துண்டொன்றை பேப்பரில் சுற்றி அதன் அருகிலேயே வைத்துள்ளார். மறுநாள் பழம் பழுதடைந்தகாரணத்தினால் அதனை சுற்றப்பட்ட பேப்பருடன் தூக்கி, கழிவகற்றல் பொதியினுள் போட்டு மூதூர் பிரதேச சபை சுத்திகரிப்பு வாகனத்தை எதிர்பார்த்து காத்திருந்தார். அழுகிய வர்த்தகப்பழப் பொதியுடன் தனது தாலிக்கொடியும் இருந்ததை ஸ்ரெலா அறிந்திருக்கவில்லை. சுத்திகரிப்பு வண்டி வந்தது. ஸ்ரெலா புஸ்பராணியின் வீட்டுக் கழிவுப்பொதி வண்டியில் ஏற்றப்பட்டது.

அன்றைய தினமே போடுவதற்காக தான் வைத்த தாலிக்கொடியை எடுக்கச்சென்ற ஸ்ரெலா அதிர்ச்சியடைந்தார். வீடு முழுவதும் தேடினார் எங்கும் கிடைக்கவில்லை. இரண்டு நாட்கள் கழித்து கழிவகற்றல் சேவைக்காக வருகைதந்த தொழிலாளர்களிடம் சங்கிலி காணாமல் போனமை பற்றி ஸ்ரெலா கண்ணீருடன் கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து இரண்டு நாட்களாக தொழிலாளர்கள் முழுமுயற்சியுடன் குப்பைகளைத் துழாவித் தேடினர். 2012.06.12 ஆந் திகதி சாரதியும், தொழிலாளர்களும் தங்கள் பணி முடித்து, சங்கிலியை தேடும் முயற்சியில் இறங்கினர். சுகாதாரத் தொழிலாளி எம்.ஜெயராஜ் மற்றும் சாரதி எம். ராசிக் என்பவர்களின் தேடுதல் வேட்டையில் சங்கிலி கண்டெடுக்கப்பட்டது.

ஸ்ரெலாவும் அவரது கணவரும் மூதூர் பிரதேசசபைக்கு அழைக்கப்பட்டு சபையின் கௌரவ உறுப்பினர்களான திரு. இ.நாகேஸ்வரன், ஜனாப். பீ.ரீ.எம். பைசர் ஆகியோர் முன்னிலையில் செயலாளர் ஜனாப்.ஜே.நஜாத் அவர்களால் உரியவர்களிடம் சங்கிலி ஒப்படைக்கப்பட்டுள்ளது..

# புதிய நிர்வாகத்தின் கீழ்..

அச்சங்கம் இயங்கிய பல்தேவைக்கட்டிடம் மற்றும் பொருட்களும் சங்கத்தின் பொறுப்பிலிருந்த அனைத்து விடயங்களும் அப்பகுதிக்குரிய கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டது.

குறித்த கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொறுப்பில் இயங்கிவந்த வாசக சாலை நூலகர் இன்மையால் தற்காலிகமாக மூடப்பட்டிருந்த நிலையில் தற்போது அக்கட்டிடம் கிராம உத்தியோகத்தர் அலுவலகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே தற்காலிகமாக மூடப்பட்டிருந்த நூலகத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு கட்டிடம் இல்லாமல் உள்ளது எனவும் நூலகத்திற்குரிய கட்டிடம் ஒன்றை வழங்கி மீண்டும் நூலகத்தை செயற்படுத்துவதே கிராம மக்களுக்கு நன்மை பயக்கும் எனவும் கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். குறித்த கிராம அபிவிருத்தி சங்கத்தை பதிவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிர்வாகத்தினர் இதற்காக கிழக்கு மாகாணப் பணிப்பாளரின் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கேள்விக்குறியாகியுள்ள பாரதிபுர...

குடும்பங்களை பெண்களே தலைமைதாங்கிவரும் நிலையில் அப் பெண்கள் தமது வாழ்நாளைக் கழிப்பதில் பெரும் இன்னல்களை அனுபவித்து வருவதுடன் அவர்களுக்கும் கிடைக்கும் சிறு சிறு உதவிகள் கூட முறையாக அவர்களைச் சென்றடைவதில்லை என்று அக்கிராமத்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் அவ்விதவைகள் அனைவரும் இணைந்து உருவாக்கியுள்ள மகளிர் அமைப்பைப் பதிவுசெய்வதில் இழுபறிநிலையுள்ளதாகத் தெரிவித்த மூதூர் இந்துக்குருமார் சங்கத் தலைவர் அவர்கள் அதற்காக மற்றொரு கூட்டமொன்றை இன்று (15.06.2013) காலை 9.00 மணியளவில் பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டிடத்தில் பாரதி விதவைகள் சங்கம் என்ற அப்பெண்கள் அமைப்பினரால் கூட்டப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. இக் கூட்டத்திற்கு மூதூர் பிரதேசச் செயலாளர் திரு பிரதீபன் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் திரு நாகேஸ்வரன் ஆகியோருட்படப் பலர் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிரந்தர வாழ்வாதாரத்தைப் பெற்றுக்கொள்ளும் சுயதொழில் வாய்ப்புக்கள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்படும் என்றே தெரியவருகின்றது.

# மூதூர் நத்வா பாலர் பாடசாலையில் சிறுவர் சந்தை

மூதூர் நத்வா பாலர் பாடசாலையின் ஆண்டுதோறும் நடைபெறும் சிறுவர் சந்தை அண்மையில் கல்விக் குழுவின் ஏற்பாட்டில் மூன்று நாள் (05,06,07 ஜுன் 2013) மிகவும் விமர்சையாக நடந்தேறியது. *(ஜவாஹிர்)*



# புறக்கணிக்கப்பட்டது திருமலை..

உறுப்பினர்களின் மனைவிமாருக்கும் வரியற்ற வாகன அனுமதிப் பத்திரங்களை வழங்கவேண்டும் என உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் அதாவுள்ளா அமைச்சரவைக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ள-தாகவும் தெரியவருகின்றது.

இவ்விடயம் தொடர்பாகத் திருமலை நகரசபையின் தலைவரை மலைமுரசு தொடர்புகொண்ட போது அவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதிலிருந்து திருமலையின் உள்ளூராட்சி அலகுகள் ஏன் விலக்கப்பட்டுள்ளன எனத் தனக்குத் தெரியாது என்றும் அவர் தெரிவித்தார்.

# அரங்காடல் நாளை..

கலை கலாசார அபிவிருத்தி அமையத்தின் அரங்காடல் வெளி - 10 நாளை மாலை நான்கு மணிக்கு திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறுகின்றது. செல்வி. நவசஞ்சிதாவின் தமிழ்மொழி வாழ்த்தோடு ஆரம்பமாகும் இந் நிகழ்வில் நிகழ்வுரையை ஸ்ரீஞானேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

திருமதி. கோ. சரீஸ்குமார் அவர்களின் செல்வ இசை நடன சபா மாணவிகளின் நடனமும், ஆசிரியர் மேகலா ஸ்ரீதர் அவர்களின் நெறியாற்கையில் தம்பலாகாமம் ஆதிகோணேஸ்வரா நடனப் பள்ளி மாணவிகளின் தனி நடனமும். திருமதி. ருசாந்தி பிருவன் அவர்களின் நெறியாள்கையில் புனித மரியள் கல்லூரி மாணவிகள் வழங்கும் “வெண்ணிலா” மெல்லிசைப்பாடல், ஆசிரியை சுரேந்தினி மணிவண்ணன் அவர்களின் வழிகாட்டலில் புனித சூசையப்பர் கல்லூரி மாணவர்கள் வழங்கும் வில்லிசை, ஆசிரியர் திருமதி. ஜுடித் ஸ்டீவ் 'அவர்களின் வழிநடத்தலில் புனித மரியாள் கல்லூரி மாணவிகளின் இசை அரங்கம் என்பனவற்றோடு மாயனின் சு. வில்வரத்தினத்தின் கவிதைகள் ஒருபார்வை மற்றும் கலாநிதி. எஸ். ரகுராம் அவர்களின் மேற்பார்வையில் கிழக்குப் பல்கலைகக்கழக திருகோண்மலை வளாக மாணவர்கள் வழங்கும் குறும்படங்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அறிந்துகொள்ளுங்கள்

### புவி

**உயிர்களின் பரிணாம வளர்ச்சி..**

கடந்த 65 மில்லியன் வருடங்களில் பாலுண்ணிகள் பல்வேறு பரிணாமங்களை அடைந்துள்ளன, சில மில்லியன் வருடங்களுக்கு முன், ஆப்பிரிக்கா கண்டத்தில் மனிதக்குரங்கைப் போன்ற ஓர் மிருகம் நிமிர்ந்து நிற்க ஆரம்பித்தது. அவ்வாறு நின்றதால் கருவிகளை உபயோகிக்கவும் தகவல் பரிமாறவும் முடிந்தது, இதுவே மூளையின் வளர்ச்சிக்கு வித்திட்டது. இவ்வாறு அதிவிரைவாக வளர்ந்த மனிதனே முதலில் புவியில் விவசாயம் மற்றும் நாகரீகத்தையும் அறிமுகப்படுத்தினான். இதனால் ஏற்பட்ட தாக்கம் மற்ற புவி வாழ் உயிரினங்களின் வாழ்க்கை மற்றும் போக்கு இவற்றை மாற்றியமைத்தது.

இப்போதுள்ள பனிக்கால சுழற்சி 40 மில்லியன் வருடங்களுக்கு முன் ஏற்பட்டதென்றும் மூன்று மில்லியன் வருடங்களுக்கு முன் பிளாய்டோசீன் காலத்தில் தீவிரமடைந்தது என்றும் கூறப்படுகிறது. அது முதல் துருவப் பகுதிகளில் உள்ள பனி 40-100,000 ஆண்டுகளுக்கொரு முறை உருகியும், உறைந்தும் ஏற்படுகின்றது. கடைசி பனிக்காலம் 10,000 வருடங்களுக்கு முந்தி முடிவடைந்தது.




**எதிர்காலம்**


ஹீலியம் வாயுவினால், அதன் மொத்த ஒளிர்வுத்தன்மை மெல்ல வளரும். சூரியனின் இந்த ஒளிர்திறன் அடுத்த 1.1 கிகா ஆண்டுகளில் (1.1 நூறு கோடி வருடங்கள்) 10 சதவிகிதமும் அடுத்த 3.5 கிகா ஆண்டுகளில் 40 சதவிகிதமும் அதிகரிக்கும். காலநிலை கணிப்பின்படி புவியை வந்தடையும் அதிக கதிர்வீச்சு, கடல் இழப்பு போன்ற மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

புவியின் மேற்பரப்பு வெப்பம் அதிகரிப்பதால் அசேதன $CO_2$ சுழற்சியை துரிதப்படுத்தி, அடுத்த 900 மில்லியன் வருடங்களில் தாவரங்களுக்கு அத்தியாவசியமான கரியமலவாயு (C4 ஒளிச்சேர்க்கைக்குத் 10 பிபிஎம்) வளிமண்டலத்தில் குறையும். தாவரங்கள் அழிவதால் அது வெளியிடும் ஆக்சிஜன் தடைப்படும், அதனால் மற்ற உயிரினங்கள் சில மில்லியன் ஆண்டுகளிலேயே முழுவதுமாக அழிந்து விடும்.

(தொடரும்.)

## உண்மையே உயர்வு தரும்

ஓர் ஊரில் கோபிநாத் என்றொரு வியாபாரி இருந்தார். அவரிடம் இரண்டு வேலையாட்கள் இருந்தனர். அவர்கள் சரிவர வேலை செய்வதில்லை. எப்பொழுதும் பொய் சொல்லி ஏமாற்றி வந்தனர். சேகர் என்பவர் கோபிநாத்தின் நெருங்கிய நண்பர். ஒரு நாள் கோபிநாத் வீட்டிற்கு சேகர் வந்திருந்தார். இருவரும் வெகு நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது சேகரிடம் கோபிநாத், ''என்னிடம் உள்ள வேலையாட்கள் சரிவர வேலை செய்வதில்லை. தாங்கள் எனக்கு உண்மையான வேலையாட்கள் கிடைக்க உதவமுடியுமா?'' என்று கேட்டார். சேகரும் கோபிநாத்திற்கு உண்மையுள்ள வேலையாட்கள் கிடைக்க முயற்சிப்பதாகக் கூறி, புறப்பட்டுச் சென்றார். சில நாட்கள் கழித்து, ஒரு நாள் காலை சேகர் அடுத்த கிராமத்திற்கு சென்றுகொண்டிருந்த வேளை, வழியில் இரு கிராமவாசிகள் செல்வதைக் கண்டார். அவர்களிடம் நெருங்கி, "நீங்கள் எங்கு வசிப்பவர்கள்? எங்கு செல்கிறீர்கள்?" என்று விசாரித்தார். அவர்களில் ஒருவன், ''நாங்கள் இருவரும் அருகிலுள்ள கிராமத்தில் வசிக்கும் ஏழைக் குடியானவர்கள். என் பெயர் பழனி, இவன் வேணு. இருவரும் வேலை தேடி அருகிலுள்ள நகரத்திற்குச் செல்கிறோம்" என்றான். சேகர் அவர்களிடம் "நீங்கள் இருவரும் என்னுடன் வாருங்கள். நான் உங்களுக்கு வேலை கொடுக்கிறேன்" என்று கூறி அவர்களை கோபிநாத்தின் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இருவரையும் வெளியே நிறுத்திவிட்டு உள்ளே சென்று கோபிநாத்தைக் கண்டு பேசினார். அவரிடமிருந்து அவரது பொன் மோதிரத்தை வாங்கினார். பின்புறமிருந்த கிணற்றிற்குச் சென்று அம்மோதிரத்தைக் கிணற்றினுள் எறிந்தார். பிறகு வெளியில் வந்து இருவரையும் கிணற்றடிக்குக் கூட்டிச் சென்று அவர்களிடம் இரண்டு பெரிய ஓலைக் கூடைகளை கொடுத்துவிட்டு கிணற்றிலிருந்து வாளியால் நீரை இறைத்து, இக்கூடைகளை நிரப்புங்கள். இது தான் உங்கள் வேலை. வேலை முடிந்ததும் உங்களுக்குத் தகுந்த கூலி கிடைக்கும் என்று கூறிவிட்டு உள்ளே சென்றார். பழனியும் வேணுவும் நீரை இறைத்துக் கூடைகளில் ஊற்றினார். வெகு நேரம் வேலை செய்தும் கூடைகள் நிரம்பவில்லை. கூடைகளின் அடியில் இருந்த துவாரங்கள் வழியே நீர் வெளியே ஓடியது. நடுப்பகல் ஆனதும் வேணு பழனியிடம் "இக்கூடைகளை நிரப்புவது என்பது முடியாத வேலை. என்னால் இனிமேல் வேலை செய்ய முடியாது, நான் போகின்றேன்." எனக் கூறி அவ்விடம் விட்டு புறப்பட்டுச் சென்றான். ஆனால் பழனி அயராமல் தண்ணீர் இழுத்துக் கூடையில் விட்டு வந்தான். வெகுநேரம் வேலை செய்த பின், கிணற்றில் நீர் வற்றியது. அதன் அடியில் கிடந்த மோதிரம் பளிச்சென்று தெரிந்தது. அதைக்கண்ட பழனி அதை வெளியே எடுத்துப் பார்த்தான். விலையுயர்ந்த பொன் மோதிரம் என்று தோன்றியது. நேரே உள்ளே சென்று சேகரிடம் அதைக் கொடுத்து, கிடைத்த விவரம் கூறினான். மோதிரத்தைக் கையில் வாங்கிய சேகர் அதைக் கோபிநாத்திடம் கொடுத்தார். "இதோ! உனக்கு உண்மையான வேலையாள் ஒருவன் கிடைத்துவிட்டான்'' என்று கூறினார். அன்று முதல் பழனி கோபிநாத்திடம் வேலைக்கு அமர்ந்தான். கோபிநாத்தும் அவனை அன்புடன் நடத்தி தகுந்த ஊதியம் கொடுத்து வந்தார்.




# பெண் விடுதலை பற்றி பாரதியார்!

பாரதியார் இன்னும் ஒருபடி மேலே போய் எரிக்கத் தயார் நிலையில் சுடுகாட்டில் இருந்த ஒரு இராசபுத்திரப் பெண்ணை (அக்பர் ஆட்சியில் சதிக்குத் தடையிருந்தது எனப் பாரதி குறிப்பிட்டுள்ளார்), ஒரு முகமதிய வாலிபன் அந்த இராசபுத்திரர்களைக் கொன்று அந்தப் பெண்ணை மீட்டுச் செல்கிறான் அந்த முசுலீம் வாலிபனுக்கும், அந்த இராசபுத்திரப் பெண்ணுக்கும் காதல் மலர்ந்து, திருமணம் நடப்பதாகத் துளஸிபாயி என்னும் கதையில் பாரதி கூறியுள்ளார்.

தொடக்கக் காலத்தில் பாரதியார் குழந்தை மணத்தை எதிர்த்தார் கலப்புத் திருமணங்களை ஆதரித்தார் பெண்கள் விவாகரத்து செய்து கொள்வதையும் ஆதரித்துள்ளார். ஏன், பெண்கள் திருமணத்தை விரும்பவில்லை என்றால் திருமணமே செய்து கொள்ளாமல் கூட விட்டுவிடலாம் என்று கூறியவர், பிற்காலத்தில் தன் கருத்துக்களைச் சிறிது சிறிதாக மாற்றிக் கொள்கிறார்.

*"கற்பு நிலையென்று சொல்ல வந்தால் இரு*
*கட்சிக்கும் அஃதுபொதுவில் வைப்போம்*
*வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்*
*வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"*
*(கும்மி)*

இப்படிப் பெண் விடுதலைக் கும்மிப் பாடலை இயற்றிய பாரதிதான் பின்வருமாறும் எழுதுகிறார்:

"ஸாவித்திரி, ஸீதை, சகுந்தலை முதலிய பெண்களின் சரிதைகளைக் கேட்கும் போது, இத்தகையோர்களுக்கு இம்மாதிரி மனப்போக்கு எவ்விதம் ஏற்பட்டதென்று நினைத்து நினைத்து மிகுந்த ஆச்சரியமுண்டாகிறாது. இம்மாதிரியான கற்புடை இத்தேசத்துப் பெண்களுக்கு என்றும் ஒரு சிறந்த புவனமாக விளங்கி நின்றமை நாட்டிற்கே ஒரு பெருமை ஆகும்."

மேலே, பாரதி மாதிரிக்குக் காட்டியிருக்கும் பெண்கள் தங்கள் கணவனுக்காகவே வாழ்ந்தவர்கள் பல இன்னல்களை அனுபவித்தவர்கள். அவர்களைத்தான் பாரதி கற்புடைய பெண்களுக்கு உதாரணமாகக் காட்டுகிறார்.

1908 வரை பெண்விடுதலை பற்றிப் பாடிய பாரதி, புதுவைக்குச் சென்று வாழ்ந்த காலத்தில், மதவாதியாகவும் பெண்விடுதலையுணர்வு அற்றவராகவும் வாழ்ந்ததைச் சில சான்றுகள் மூலம் அறிய முடிகிறது. கற்பு என்பதை எப்பாடுபட்டாவது பெண்கள் காக்க வேண்டும் என்று மிகவும் வலியுறுத்துகிறார். "தமிழ்நாட்டு மாதர்க்கு மட்டுமேயன்றி உலகத்து நாகரிக தேசங்களிலுள்ள ஸ்திரீகளுக்-கெல்லாம் கற்பு மிகச் சிறந்த கடமையாகக் கருதப்படுகிறது. அதைக் காக்கும் பொருட்டாக ஒரு ஸ்திரி எவ்வளவு கஷ்டப்பட்ட போதிலும் தகும்."

பாரதி ஒரு மதவாதி. எனவே பதிவிரதத் தன்மையில் அதிக நம்பிக்கை கொள்கிறார்.

"ஆணும் பெண்ணும் ஒன்றுக்கொன்று உண்மையாக இருந்தால் நன்மை உண்டாகும். பதிவிரதைக்கு அதிக வீரமும் சக்தியும் உண்டு. சாவித்திரி தனது கணவனை எமன் கையிலிருந்து மீட்ட கதையில் உண்மைப் பொருள் பொதிந்திருக்கிறது." எனக் கூறுகிறார்.

(கீற்று)

(தொடரும்..)

## இறால் டெவல்

**தேவையான பொருட்கள்:** இறால் - கால் கி.கிராம், தக்காளிப்பழம் - 100 கிராம், கறி மிளகாய் - 100 கிராம், பம்பாய் வெங்காயம் - 1, பச்சைமிளகாய் - 5, சில்லி கார்லிக் சோஸ் - 2 மே.க, உப்புத்தூள் - அளவிற்கு, மிளகுத்தூள் - அளவிற்கு, தேங்காயெண்ணெய் - 4 மே.க, ரேஸ்ற்மேக்கர் - அளவிற்கு, சோயா சோஸ் - 2 மே.க, முட்டை - 1

**செய்முறை:** முட்டையை உடைத்துப் பாத்திரத்தில் விட்டுச் சிறிது உப்புச் சேர்த்து அடித்து வைக்குக. இறாலைத் துப்புரவு செய்து கழுவி எடுத்துக் கொள்ளவும். இறாலைத் துப்பரவு செய்து கழுவி எடுத்துக் கொள்க. தக்காளிப்பழம், கறிமிளகாய், வெங்காயம் என்பவற்றை அளவான துண்டுகளாக வட்ட வடிவில் வெட்டிக் கொள்க. பச்சை மிளகாயைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். தாச்சியில் எண்ணெயைக் கொதிக்க வைத்து இறாலையிட்டு அரைப்பதமாகப் பொரியவிட்டு, அதனுள் கறிமிளகாய், வெங்காயம், பச்சைமிளகாய் என்பவற்றைச் சேர்த்து முக்கால் பதமாக மரக்கறிவகை அவிந்து வரும்போது தக்காளி, மிளகுத்தூள், உப்புத்தூள், அடித்த முட்டை, சிலி கார்லிக் சோஸ், சோயா சோஸ் என்பவற்றையிட்டு ரேஸ்ட்மேக்கர் அளவிற்குச் சேர்த்துக் கிளறி கறி திரளத் தொடங்கியதும் இறக்கிக் கொள்ளவும்.



## உள்ளி ஊறுகாய்

**தேவையான பொருட்கள்:** உள்ளி - கால் கி.கி, நல்லெண்ணெய் - 3 மே.க, பெருங்காயம் - 1 துண்டு, கடுகு - 1 தே.க, மிளகுத் தூள் - 1 தே.க, உப்புத் தூள் - 1 தே.க, சீரகத் தூள் - 1 தே.க, புளி - பாக்களவு, தண்ணீர் - அரை தம்ளர், வினாகிரி - 3 மே.க, தனி மிளகாய்த் தூள் - 1 தே.க, மஞ்சள் தூள் - 1 தே.க



**செய்முறை:** உள்ளியைத் தோல் நீக்கித் துப்பரவாக்கி வைத்துக் கொள்ளவும். பெருங்காயத்தைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளவும். பின் தாச்சியை அடுப்பில் வைத்து சூடானதும் நல்லெண்ணெய் விட்டு கொதித்ததும் பெருங்காயத்தை இட்டு பொரியவிடவும். பெருங்காயம் பொரிந்து நிறம் மாறியவுடன் கடுகை இட்டு வெடிக்க வைக்கவும். கடுகு வெடிக்கத் தொடங்கியவுடன் உள்ளியையிட்டு பொன்னிறமடைந்ததும் மஞ்சள் தூள், மிளகுத் தூள், மிளகாய்த்தூள், சீரகத்தூள், உப்புத் தூள் என்பன இட்டு நன்கு கிளறிச் சேர்த்துக் கொள்ளவும். பின்பு அரை தம்ளர் தண்ணீரில் கரைத்து வடித்த புளிக்கரைசல், 3 மே.க வினாகிரி என்பன இட்டு நன்றாகச் சேர்த்துக் கொண்ட பின் நீர்த்தன்மை ஓரளவாக வற்றும் வரை கொதிக்க வைத்து இறக்கி நன்றாக ஆறியதும் போத்தலில் அடைத்து வைத்துப் பயன்படுத்திக் கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த வார ஆங்கிலப் பத்திரிகைகளின் மீதானபார்வை...

## the SUNDAY TIMES

### மத இன துவேச நடவடிக்கைகளுக்கெதிராக நடவடிக்கை

குற்றவியல் நடைமுறைகளின் கீழ் பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஒரு பிரிவாக இன மற்றும் மத துவேச நடவடிக்கைகளை தூண்டுபவர்களுக்கு எதிராக எடுக்கவேண்டிய நடவடிக்கைகளையும் உள்ளடக்க வேண்டுமென அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அரசைக் கேட்டுள்ளார். மந்திரி சபையிடம் சமர்ப்பிக்கப்படவுள்ள இக் கோரிக்கையினை ஆலோசிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். இந்நடவடிக்கையானது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கேற்ப தேசிய மற்றும் சமயங்களுக்கிடையே ஒற்றுமையைப் பேணுவதுடன் இனம் ஒன்றின் மீது அல்லது மதம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்படும் வெறுக்கத்தக்க பேச்சுக்களைத் தடுக்க வேண்டும் என்ற நோக்குடனேயே மேற்கொள்ளப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார். இவ்விடயம் நீதி அமைச்சுக்கு உரியதாகவிருப்பினும் இனவிவகாரம் ஒன்றுடன் தொடர்புபடுவதால் தனது அமைச்சினாலும் கையாளப்பட முடியும் எனவும் தெரிவித்த அவர் மதிப்புக்குரிய நீதியமைச்சரின் கலந்தாலோசனையுடன் தான் இந்நடவடிக்கையினை மேற்கொள்ள முடியும் எனவும் கூறியுள்ளார்.

### பெண்களுக்கு பாலியல் வன்புணர்வு தாக்குதல் தொடர்பாக அமெரிக்கா அறிவுறுத்தல்

இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகளாக வரும் பெண்களின் மீது மேற்கொளப்படும் பாலியல் வன்புணர்வுகள் அதிகரித்துள்ளதை அடுத்து இலங்கைக்கு சுற்றுலா செல்லும் பெண்களை கவனமுடன் இருக்குமாறு அமெரிக்கா 06.05.2013ல் வெளியிட்ட தனது அறிக்கையின் ஊடாக அறிவுறுத்தியுள்ளது. தனியே இலங்கையில் நடமாடுவதைத் தவிர்க்குமாறும் மக்களுடன் சேர்ந்து பயணிக்குமாறும் அவ்வறிவித்தல் மேலும் கேட்டுள்ளது. தென்பகுதி கடற்கரைகளில் அதிகரித்துள்ள சுற்றுலாப் பயணிகளுக்கெதிரான பாலியல் தாக்குதல் குறித்து அவதானத்துடன் இருக்குமாறு மேற்கு நாட்டு பெண்களுக்கு அறிவுறுத்தி உள்ளதுடன் இலங்கையின் சட்ட முறைமையானது அமெரிக்காவில் உள்ளதுடன் ஒப்பிடும் போது மிக வேகங்குறைந்தது என்பதையும் கருத்திற் கொள்ளுமாறு அவ்வறிக்கை கூறியுள்ளது.

### ஐ.நா வின் ஆயுத பரிகரண உடன்படிக்கையில் இலங்கை கையெழுத்திடவில்லை

சட்டவிரோத ஆயுத வியாபாரத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் சபையினால் முன்மொழியப்பட்டுள்ள ஆயுத பரிகரண உடன்படிக்கையில் தற்போது வரை இலங்கை ஒப்பமிடவில்லை என தெரிய வருகிறது. இப் பரிகரண உடன்படிக்கையினை இலங்கை படித்து வருவதாக வெளிவிவகாரச் செயலாளர் தெரிவித்துள்ளார். ஐ.நா சபையின் பொதுக்கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இவ் உடன்படிக்கையில் ரஷ்யா, சீனா ஆகிய இரு ஆயுத ஏற்றுமதி நாடுகளும் இந்தியா, சவுதி அரேபியா, இந்தோனேஷியா, எகிப்து ஆகிய முக்கிய ஆயுத இறக்குமதி நாடுகளும் கையெழுத்திட மறுத்துவருவது குறிப்பிடத்தக்கது. ஐ.நா சபையின் உடன்படிக்கை ஒன்று வலுவுள்ளதாக மாற வேண்டுமாயின் ஆகக் குறைந்தது 50 நாடுகள் அவ்வொப்பந்தத்தை வலுவாக்க வேண்டும். ஆயுதப் பரிகரண ஒப்பந்தத்திற்கு தற்போது வரை 67 நாடுகள் வலுவளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## SUNDAY OBSERVER

Sri Lanka's English Newspaper with the largest circulation

### நடத்தை விதிகள் சட்டமல்ல — கெஹெலிய ரம்புக்வெல்ல

ஊடகத்துறை மீது கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள நடத்தை விதிகளானவை விதிப்புக்களும் நிபந்தனைகளுமாகவும் மட்டுமே இருக்கும் என்றும் அவை சட்டமாக்கப்பட மாட்டாது என்றும் ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்பக்வெல்ல தெரிவித்துள்ளார். இலங்கைப் பத்திரிகை ஆணைக்குழு போன்ற ஒரு அமைப்பாகவே இச்செயற்பாடு இருக்கும் என அவர் தெரிவித்தார். ஊடகத்துறை மீதான புதிய விதிப்புக்களையும் நிபந்தனைகளையும் உருவாக்கி விட்டதாகக் கூறும் அவர் பாராளுமன்ற குழுவிற்கு அதன் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அனைத்து கட்சிகளுடனும் இவ்விடயம் தொடர்பாக புரிந்துணர்வொன்றை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்குடனேயே பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். தற்போது ஊடகத்துறைக்குள்ள சுதந்திரம் போதுமானது என்று தெரிவித்த அவர் இலங்கையில் ஊடகத்துறையினை ஒழுங்குபடுத்தும் எந்த நுட்பமும் காணப்படவில்லை எனவும் தெரிவித்தார். பெரும்பாலான ஊடகத்துறை நிறுவனங்கள் பொறுப்புடன் நடந்து கொண்டாலும் கூட பொறுப்பற்ற முறையில் நடக்கும் சில ஊடக நிறுவனங்களை ஒழுங்குக்குக் கொண்டுவர இந்நிபந்தனைகளும் விதிப்புக்களும் தேவையாகவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

### 250,000 வீடுகளை இந்தியா பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கும்

இந்தியா பயணமாகியுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான குழு இந்திய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியைச் சந்தித்த போது பெருந்தோட்டத் தொழிலாளிகளுக்காக 250,000 வீடுகளை கட்டித் தரும் உறுதி மொழியை சோனியாவிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளது. இவ்வாறு இந்தியா சென்றுள்ள தொண்டமான் குழு சோனியாவுடன் 13வது திருத்தம் தொடர்பாக ஆலோசித்ததுடன் மலையக தமிழர்களுக்கான உயர்கல்வி வசதிகள் தொழிற்றுறைப் பயிற்சிகள் போன்றவை தொடர்பாகவும் ஆலோசித்துள்ளது.

### அரச நிறுவனங்களைத் தூக்கியெறிந்துள்ள அரச சுற்றறிக்கை

90வீதமான அரச நிறுவனங்கள் "டெங்குவைத் தடுக்கும் குழு" வினை தத்தமது நிறுவனங்களில் அமைக்க வேண்டும் என்ற சுற்றறிக்கைப்படி நடக்கவில்லை என தெரியவருகின்றது. சுகாதார அமைச்சின் பேசவல்ல அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் 10 வீதத்திற்கும் குறைவான அரச நிறுவனங்களே இச்சுற்றறிக்கைக்கு ஏற்ப நடந்துள்ளதாகவும் டெங்குவைப் பரப்புவதில் முன்நிற்கும் அரச கூட்டுத்தாபனங்கள் எவையும் இச்சுற்றறிக்கைக்கு பதிலளிக்கவில்லை என்றும் தெரிவித்தார். அரச நிறுவனங்களின் சூழலை சுகாதார அமைச்சு பரிசோதிப்பது என்பது கனவிலும் முடியாத காரியம் என தெரிவித்த அவர் இவ்வாறு பரிசோதிப்பது பொதுமக்களின் கடமை என்றும் தெரிவித்தார். நுளம்புக் குடம்பிகள் உருவாகுவதற்கு பொலித்தீன் பைகள், யோகட் கோப்பைகள், செத்த மரஇலைகள் போன்றவை உதவியளிப்பதாக தெரிவித்த அவர் தற்போது வரை 14,000 பேர் டெங்குத் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளதாகவும் அத்தொகையில் 43 வீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

### பாராளுமன்ற தெரிவுக்குழுவிற்கு த.தே.கூ பங்குபற்ற வேண்டும்

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த அரசியற் கட்சிகளின் தலைவர்கள் தமிழர்களின் பிரச்சனைகளை அரசியல் ரீதியாக தீர்த்துக்கொள்ள வேண்டுமாயின் தமிழ்த் தேசியக் கூட்டத்தினர் பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கு சமூகமளித்து தீர்த்துக்கொள்ள வேண்டுமேயொழிய தமிழர்கள் தமது அரசியல் தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தியாவையோ அல்லது ஏனைய நாடுகளையோ தங்கியிருக்கக்கூடாது என்று தெரிவித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த 18 மாதங்களாக பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு சமூகந்தராமையால் தமிழர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான தீர்வினைக் கண்டு கொள்ள முடியாதுள்ளதாக பாராளுமன்ற பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். பல வருடங்களாக தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதனை இழுபறி நிலையில் விட்டிருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே என அவர் மேலும் தெரிவித்தார்.

### அரசைக் கேள்வி கேட்கும் அமெரிக்கா

ஐ.நா சபையில் மனித உரிமைச் சபையின் கடந்தவார அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் அமெரிக்கா கடும் கேள்விகளை எழுப்பியுள்ளது. இலங்கையில் தற்போதும் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் அமைதியாக ஒன்றுகூடும் சுதந்திரம் போன்றவை மறுக்கப்பட்டிருப்பதுடன் மனித உரிமை பாதுகாவலர்கள், உள்ளூர் சமூக குழுக்களின் அங்கத்தவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஊடகவியலாளர்கள் மீதும் ஊடக நிறுவனங்களின் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பாக நம்பத்தகு விசாரணைகள் எவற்றையும் அரசு மேற்கொள்ளவில்லை என மேலும் குற்றஞ்சாட்டியுள்ளார் ஐ.நாசபைக்கான பிரதிநிதி ஐலின் டோனா. ஐ.நாவின் விசேட பிரதிநிதிகளை இலங்கைக்குள் அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் அக்கூட்டத்தில் கூறியுள்ளார். ஏனெனில் தற்போது வரை இலங்கை அவ்வாறானோர்களின் வருகையை அனுமதிக்கவில்லை. இவ்வாறு இலங்கைக்குள் வர எத்தனிப்போர்களுள் ஒருவராக சுதந்திரமான எண்ணத்தையும் கருத்துக்களையும் வெளியிடுவோரை ஊக்கப்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் ஐ.நா வின் விசேட அங்கத்தவரான பிராங் லா றூவும் அடங்குகின்றார்.

## The Sunday LEADER

### பாராளுமன்றின் தனது அறிக்கை தொடர்பாக புலனாய்வுத் துறையுடன் பேசுவதற்குத் தயார்: அருந்திக பெர்னாண்டோ

காணாமற்போன பிரகீத் எக்நெலி கொட தொடர்பாக கடந்த வாரம் தான் பாராளுமன்றில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பாக எழுத்து மூல அறிக்கையொன்றை குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் தான் வழங்கத் தயாரென அவ்வாறு பாராளுமன்றத்தில் தெரிவித்த உறுப்பினர் அருந்திக பெர்னான்டோ தெரிவித்தார். பிரான்சிலுள்ள ஊடகவியலாளரான மஞ்சுள வெடிவர்த்தனவை பிரான்சில் சந்தித்தபோது எக்நெலி கொட அவருடன் இருந்தார் என பாராளுமன்ற உறுப்பினர் அருந்திக அண்மையில் தெரிவித்திருந்தார்.


### வட மாகாணத் தேர்தல் நடைபெறுவது சந்தேகமே! த்.தே.கூ

இவ் வருடம் செப்டம்பர் மாதத்தில் வட மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறுவது சந்தேகமே என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. இலங்கையின் சனாதிபதி தேர்தல்கள் நடைபெறும் என தெரிவித்திருந்தாலும் கூட இவ்வாறு தேர்தல்களை நடாத்துவதற்கான ஆணையை சனாதிபதி தேர்தல்கள் திணைக்களத்திற்கு பிறப்பிக்கவில்லை என்பதுடன் நவம்பர் மாதத்தில் பொதுநலவாய தலைவர்களின் கூட்டத்தொடரும் நடைபெறவிருப்பதால் தனக்குச் சந்தேகம் எழுந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

### கொலைக்கான ஆதாரங்களைத் தடவும் குற்றப்புலனாய்வுப் பிரிவு

பம்பலபிட்டியில் கடந்த மாதம் படுகொலை செய்யப்பட்ட பிரபல்ய வர்த்தகரின் கொலை தொடர்பான தடயங்களை தடவி வரும் குற்றப்புலனாய்வுப் பிரிவு அக்கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள உதவிக் காவல்துறை ஆய்வாளரையும், மேலும் 3 காவல்துறை அலுவலரையும் தடுத்து வைத்து விசாரிக்கும் அனுமதியைப் பெற்றுள்ளனர். இக்கொலை தொடர்பாக பிரதிக் காவல்துறை மா அதிபர் லாஸ் குணவர்த்தனவிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சர்வதேசத் துடுப்பு விளையாட்டின் இலங்கை நடுவர் கந்தையா பிரான்ஸிஸ் சாவடைந்தார்



சர்வதேசத் துடுப்பு விளையாட்டுக்கள் பலவற்றிற்கு நடுவராகப் பணியாற்றிய இலங்கைத் தமிழரான கந்தையா திருஞானசம்பந்தபிள்ளை பிரான்ஸிஸ் தனது 73வது வயதில் சாவடைந்துள்ளார். இங்கிலாந்தில் இலங்கைக்கு எதிராக இங்கிலாந்து விளையாடிய ஐநாட்போட்டிகளின் (டெஸ்ட் போட்டி) போது "சாரா ஓவல்" மைதானத்தில் 1982ம் ஆண்டில் சர்வதேச நடுவராக முதன் முதலில் கந்தையா பிரான்ஸிஸ் களமிறக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 1982 தொடக்கம் 1990 வரை நடைபெற்ற 25 ஐநாட் போட்டிகளிலும் 73 ஒருநாட் போட்டிகளிலும் நடுவராகப் பணியாற்றியுள்ளார். இக்காலப்பகுதியில் 1996 மற்றும் 1999ம் ஆண்டுகளின் சர்வதேச உலகக் கோப்பைத் துடுப்புப் போட்டிகளிலும் அவர் நடுவராகப் பணியாற்றியமை குறிப்பிடத் தக்கது.

# இலங்கைத் தேசிய துடுப்பாட்ட அணிக்கான அனுசரணையாளர்களாக இலங்கைத் தேயிலைச் சபை

இலங்கைத் துடுப்பாட்ட அணிக்கான அனுசரணையாளர்களாக இலங்கைத் தேயிலைச் சபையினர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர். அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு இவ் அனுசரணை ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இதற்கான அனுசரணைத் தொகையாக 530 மில்லியன் ரூபாய்களை இலங்கைத் தேயிலைச் சபை வழங்கமுன்வந்துள்ளது. அதற்குப் பிரதியுபகாரமாக இலங்கையின் தேசிய துடுப்பாட்ட அணி தான் பங்குபற்றும் அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் போட்டிகளில் தேயிலைச் சபைச் சின்னத்துடன் கூடிய மேலங்கியை அணிந்து விளையாடும்.

இலங்கைத் துடுப்பாட்ட அணிக்கான மற்றொரு அனுசரணையாளர்களாக தேர்வு செய்யப்பட்டிருந்த டயலொக் அக்சியாட்டா நிறுவனம் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கைத் தேயிலைச் சபையுடனான முரண்பாடொன்றினால் முடிவுகள் எதனையும் மேற்கொள்ளாது விலகிச் சென்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.






# ஒரு கொலையின் கதை

7 (மாயன்)



அவரின் தமக்கை இறங்கி பயத்தில் வந்த வழியாகவே ஓடத் தொடங்கிவிட்டார்......

ஸ்கூட்டி பெப்டின் வெளிச்சத்தில் யாரோ விழுந்து கிடப்பதும் அவ் உடலின் அருகில் இரத்தம் உறையாமல் வடிந்து நிலத்தில் உறைந்துகொண்டிருப்பதையும் கேதீஸின் மாமி கண்டார். எனினும் ஈருருளிக்கு நேராக கேதீஸின் உடல் கிடந்ததால் தலையையோ முகத்தையோ தெளிவாக அவரால் பார்க்க முடியாது போய்விட்டது. அவரின் மனமும் புத்தியும் தம்மிடையே போராடத் தொடங்கின.

இது கேதீஸ் தான்....இல்லை அவனா இருக்காது..... அது கேதீஸ் போட்டிருந்த ரீசேர்ட் தான்.... அது அவனா இருக்கக் கூடாது.... அவன் போட்டிருந்த அதே ஜீன்ஸ்...அது அவன் தான்...அவனே தான்...." மாமியின் மனதைப் புத்தி வென்று உண்மையை உறைக்கச் செய்தது.... அவர் பெருங்குரலில் கத்தியவாறு வீடு நோக்கி ஓடத் தொடங்கினார்.

" ஆரோ கேதீஸ வெட்டிப் போட்டாங்கள்" என்ற அவரது குரலைக் கேட்டு கேதீஸின் மனைவியின் தாயும் அவரது இரண்டாவது மகளும் கேதீஸின் உடல் கிடந்த இடத்தை நோக்கி வேகமாக ஓடத் தொடங்கினர்.

அச்சத்தில் அவர்களது வீட்டிற்கு ஓடிய மாமி அங்கிருந்த மூன்றாவது மகளிடம் கதறத் தொடங்கினார். " அது அவன் மாதிரித்தான் கிடக்கு... போய்ப் பாருங்கோ..." என்று.

அனைவரும் சிறிது வினாடிகள் அவனுடலைச் சூழ்ந்து கதறத் தொடங்கினர். அக் கதறலைக் கேட்டு அயலவர் எவரும் வெளியே தலைகாட்டவில்லை.

கேதீஸின் மனைவியின் இரண்டாவது தங்கை அருகிலுள்ள முச்சக்கர வண்டியாளர்களை உதவிக்கு அழைத்த போதும் அவர்கள் அவ்வழைப்பைப் பெற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. உடனடியாகவே அவள் தமது பரிச்சயமான முச்சக்கர வண்டிச் சாரதிக்கு அழைப்பை ஏற்படுத்தினாள். அவ்விடத்திற்கு வந்த அம்முச்சக்கரவண்டிச் சாரதி கேதீஸின் உடலைத் தொட்ட போது அவ்வுடல் குளிர்ந்திருந்தது. அவர் அவன் மரணித்து விட்டதை உறுதிசெய்தபடி எவரையும் அருகிற் செல்ல வேண்டாம் எனப் பணித்துவிட்டு அவர்களது வீட்டிற்கு வருகைதந்திருந்த உறவினரில் ஆண் ஒருவரை அழைத்து பேருந்து நிலையத்தில் கடமையிலுள்ள காவல் துறையினருக்கு விடயத்தைத் தெரியப்படுத்துமாறு தெரிவித்துள்ளார். அதன்படி அவ் உறவினன் காவல்துறையினருக்கு தெரிவக்கச் சென்றுள்ளார்.

இருண்ட இந்த இரவின் மணித்துளிகள் 9.30 மணியைத்தாண்டிப் பயணித்துக் கொண்டிருக்கும் போது கேதீஸின் வீட்டின் தொலைபேசி மணி அழைத்தது.

"ஹலோ" எனக் கேதீஸின் தாய் அவ்வழைப்பைப் பேச முற்பட்டபோது மறுபுறத்திலிருந்து கதறல்..... "மாமி...மாமி....ஓடி வாங்கோ... ஓடி வாங்கோ...." என்னும் சொற்களுக்கு மேல் எதுவும் மறுபக்கத்திலிருந்து கேட்கவில்லை. எனினும் சிறு குழந்தைகளின் அலறல்சத்தத்தைத் கேதீஸின் தாய் மறுபுரத்திலிருந்து கிரகித்துள்ளார். அதனைத் தொடர்ந்து அவரது சிந்தனை முழுவதும் வெளிநாட்டில் வசிக்கும் கேதீஸின் மூத்த தமையனின் பக்கம் சென்றுவிட்டது. அங்குதான் நடக்கக்கூடாதது நடந்துவிட்டது என ஊகித்துக்கொண்ட அவர் அதிர்ச்சியடைந்த நிலையில் கேதீஸின் இரண்டாவது தமையனை அழைத்தபடி தொலைபேசியை கைவிட்டுள்ளார். அக் கணத்தில் தொலைபேசித் தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

தாயின் அழைப்பைக் கேட்டு அவ்விடத்திற்கு வந்த கேதீஸின் இரண்டாவது சகோதரனுக்கு தாயின் அழுகை தவறான விடயமொன்று நிகழந்துவிட்டதாகவே தெரிவித்திருந்தது.

இறுதியாக அழைத்த தொலைபேசி இலக்கத்தை ஆராய்ந்த அவருக்கு அத் தொலைபேசியழைப்பு இலங்கையிலிருந்து டயலொக் சேவையின் ஊடாக மேற்கொள்ளப் பட்டது புரிந்துபோனது. மீள அக்கைத்-தொலைபேசிக்கு அவர் அழைப்பை ஏற்படுத்தியிருந்தார். மறுபுறத்தில் ஒலித்த குரலை அடையாளம் காணுவது ஒன்றும்



கடினமான காரணமாக அவருக்கு இருக்கவில்லை. அக்குரலின் உரிமையாளர் கேதீஸின் மனைவியின் இரண்டாவது தங்கை என்பதைப் புரிந்து கொண்டார் அவர்.

''ஹலோ...மாமி...ஓடி வாங்கோ...கேதீஸ் அண்ணவை யாரோ வெட்டிப் போட்டாங்கள்" என்ற செய்தி அவர்களை வந்தடைந்தது.

" உடனே வைத்தியசாலைக்கு கொண்டு போங்கோ" என்ற பதிலுக்கு அங்கிருந்து வந்த செய்தி "இல்லை ...நீங்கள் வீட்ட வாங்கோ" என்பதாகவே இருந்தது.

பதிலின் உட்கருத்தை அவர்கள் உடனடியாகவே புரிந்து கொண்டார்கள். அத்தாயினது மகன், அத்தமயனது தம்பி மரணித்துவிட்டான் என்பதே...

அவர்கள் உடனடியாக தலத்திற்கு விரைந்தார்கள். அங்கே அவர்கள் உயிரற்ற அவனது உடலையும் அதைச் சுற்றி நின்று அழும் உறவினர்களையும் கண்டுள்ளனர். அவ் உறவினர்களை விலக்க அருகிற் சென்ற கணத்தில் கேதீஸின் இரண்டாவது சகோதரன் மயக்கமாகி விழுந்தான் அவனது மூளையின் ஞாபகப் பரப்பில் அன்று மாலை 4.30 மணிக்கு தனது தம்பி பேசிய வாசகங்கள் எதிரொலித்தன........

"நீ என்ட புதுச் செருப்ப மாறிப் போட்டுக்கொண்டு போய்ட்டாய் அண்ணா.... நான் இண்டைக்குத் தான் கொழும்பால அத வாங்கிக்கொண்டு வந்தனான்......"

(தொடரும்)

மலைமுரசு பத்திரிகையின் உத்தியோகபூர்வ விநியோகத்தர்கள் - திருமலை நகர லியோ கழகத்தினர்
The official distributor of Malaimurasu is Leo club of Trincomalee Town

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை, ஸ்ரீராம் பிரதர்ஸ் (பிறைவேட்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் 15. 06. 2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.